தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு எண் 394

# கோயில் அரும்பொருட்கள் பாதுகாப்பு

## ( Conservation of Temple Objects )

*இந்நூல் 1999 ஜனவரி 7, 8 மற்றும் 9 தேதிகளில்
சரசுவதி மகால் நூலகத்தில் நடைபெற்ற
32ஆவது தேசியப் பண்பாட்டுப் பொருட்கள் பாதுகாப்பு
மாநாட்டினையொட்டி வெளியிடப்பட்டது.*

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
**சரசுவதி மகால் நூலகம்**
தஞ்சாவூர்.

1999 ] [ விலை: ரூ. 10—00

தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு எண் : 394

# கோயில் அரும்பொருட்கள் பாதுகாப்பு

## (Conservation of Temple Objects)

**முனைவர் வே. ஜெயராஜ்**
காப்பாட்சியர்
வேதியியப் பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி ஆய்வகம்.
அரசு அருங்காட்சியகம், எழும்பூர்
சென்னை-600 008

*உதவி*
**ப. பெருமாள்**
காப்பாளர், தஞ்சாவூர் மகாராஜா சரபோஜி
சரஸ்வதி மகால் நூலகம், தஞ்சாவூர்

*வெளியிடுபவர்*
**து.நா. இராமநாதன்,** இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சியர் மற்றும் இயக்குநர்
தஞ்சாவூர் மகாராஜா சரபோஜி சரஸ்வதி மகால் நூலகம்
தஞ்சாவூர்

1999 ] [ விலை ரூ. 10—00

© முதன்மை ஆணையர்,
அருங்காட்சியகத் துறை, சென்னை.

# நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | கோயில் அரும்பொருட்கள் பாதுகாப்பு |
| ஆசிரியர் | : | முனைவர் வே. ஜெயராஜ் |
| வெளியிடுபவர் | : | இயக்குநர், சரசுவதி மகால் நூலகம் |
| வெளியீட்டு எண் | : | 394 |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதல் பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : | ஜனவரி, 1999 |
| தாள் | : | 16 கி. கி. சேஷசாயி |
| நூல் அளவு | : | 21 x 14 செ. மீ. |
| பக்கங்கள் | : | 54 |
| படிகள் | : | 500 |
| எழுத்து | : | 12 புள்ளி |
| அச்சிட்டோர் | : | சரசுவதி மகால் அச்சகம் |
| புத்தகக்கட்டு | : | மெலிந்த அட்டை |
| பொருள் | : | கோயில் பாதுகாப்பு |
| விலை | : | ரூ. 10—00 |

# வெளியீட்டாளர் முகவுரை

இந்தியத் திருநாடு தொன்மையான பல்வேறு இன மக்களையும், மொழிகளையும், பண்பாடுகளையும் கொண்டிலங்குவது. ஈங்கு, பல்வகை மதத்தைச் சார்ந்த மக்களும், தங்களுக்குள் ஓர் இயைவோடு வாழ்ந்து வருகின்றனர். அம்மக்களின் மரபு மற்றும் பண்பாட்டுச் சின்னங்களான வழிபாட்டிடங்கள், ஆங்குள்ள அரும்பொருட்கள் ஆகியன காலங்காலமாகப் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டியன வாகும். இருப்பினும், மக்களின் அறியாத் தன்மையி னாலும், கவனக் குறைவினாலும் பொருளாசையினாலும், மற்றும் இயற்கைச் சுற்றுச் சூழல் மாறுபாட்டாலும், பண்பாட்டுப் பொருட்கள் சிதைவுறுகின்றன. பண்பாட்டுப் பொருட்கள் அந்தந்த இன, மத நாகரிகத்தின் வரலாற்றினை வெளிக் கொணரும் சான்றுகளாகத் திகழ்வதால், இவற்றைப் பாதுகாப்பது இந்திய நாட்டின் ஒவ்வொரு குடிமகனின் கடமையாகும்.

கோயில் அரும்பொருட்களைப் பல்வகையாகப் பிரிக்கலாம். கற்சிற்பங்கள், சுதை உருவங்கள், மரச் சிற்பங்கள், உலோகத்தினாலான சிற்பங்கள் மற்றும் வழிபாட்டுப் பொருட்கள், திரைச்சீலைகள், ஓவியங்கள், கோயில் ஆவணங்கள் ஆகியவற்றோடு கல்வெட்டுக்களும் அடங்குவன. கிறித்தவ, முகமதிய வழிபாட்டு இடங்களில் சுதை உருவங்கள், கண்ணாடி அலங்காரப் பொருட்கள், பாஞ்சாக்கள், விரிப்புகள் ஆயுதங்கள், இசைக் கருவிகள், வெண்கல மணிகள், சுவரோவியங்கள் போன்றவை காணப்படும். இங்கு "கோயில் அரும்பொருட்கள் பாதுகாப்பு" என்பது பொதுவான சொல்லாகவே பயன் படுத்தப்படுகிறது. அரும்பொருட்கள் எவ்வாறு சிதைவு அடைகின்றன அல்லது சிதைக்கப்படுகின்றன என்பதனை

அறிந்துகொண்டால் அவற்றின் மூலகாரணத்தினைத் தெரிந்து, தடுத்துக் கொள்ள ஏதுவாக அமையும். அதற்கெனத் தனியொரு துறை வளர்ந்து வருகின்றது. அதுவே இந்தியப் பண்பாட்டுப் பொருட்கள் பாதுகாப்புச் சங்கம். இத்துறை வல்லுநர்கள் ஆண்டுக்கொருமுறை கூடி, அவ்வப் பகுதிகளிலுள்ள பண்பாட்டுப் பொருட்களின் தன்மை, சுற்றுச் சூழல், பாதிக்கப்படும் விதம் ஆகியவற்றை ஆராய்ந்தறிந்து அவற்றை அழிவினின்று காக்கும் அரிய செயலைச் செய்து வருகின்றனர். 1982ஆம் ஆண்டு தமிழகத்தில் சென்னை அருங்காட்சியகத்தில் இந்தச் சங்கத்தின் மாநாடு நடைபெற்றது குறிப்பிடத் தக்கது. இம்முறை அவ்வமைப்பு பதினாறு ஆண்டுகளுக்குப் பின்னால், தஞ்சை சரசுவதி மகால் நூலகத்திற்குக் கிடைத்திருப்பதால் இந்நூலை வெளியிட இது ஓர் அரிய சந்தர்ப்பமாக அமைகின்றது சென்னை அரசு அருங்காட்சியகத்தின் காப்பாட்சியர் முனைவர் வே. ஜெயராஜ் அவர்கள், சரசுவதி மகால் நூலகப் பாதுகாப்பாளர் திரு ப. பெருமாள் அவர்களின் உதவியுடன் உருவாக்கிய இந்நூல் முதன் முதலில் தமிழில் வெளிவரும் கோயில் அரும்பொருட்களைப் பற்றிய நூலாகும். இதனை உருவாக்கிய ஆசிரியர்களுககு எனது பாராட்டுக்கள். இந்நூல் தமிழ்கூறும் நல்லுலகில் நன்மதிப்மையும், நல்லதோர் இடத்தையும் பெறும் என்பதில் ஐயமில்லை. இந்நூலினை சரசுவதி மகால் நூலகத்தின் வழி வெளியிட இசைவளித்த அரசு அருங்காட்சியகத் துறையின் முதன்மை ஆணையர் திரு சு. ரங்கமணி, இ. ஆ. ப., அவர்களுக்கு நன்றிகூறக் கடப்பாடுடையேன்.

சரசுவதி மகால் நூலக வளர்ச்சியில் ஆர்வம் காட்டி வரும் தமிழக முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுககும், கல்வியமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் அவர்களுக்கும், நூலக நலனில் அக்கறை காட்டிவரும் பள்ளிக் கல்வித்துறைச் செயலர் திரு. எம். ஏ. கௌரிசங்கர், இ. ஆ. ப., அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றி உரியது.

சரசுவதி மகால் நூலகத்தில் பாதுகாக்கப்பட்டுவரும் அச்சில் வராத அரிய சுவடிகளை நூலாக்கி வெளியிட நிதியுதவியினை அள்ளித் தரும் மைய அரசின் பண்பாட்டுத் துறைச் செயலர் டாக்டர் ஆர். வி. வைத்தியநாத அய்யர், இ. ஆ. ப, அவர்களை நன்றியோடு போற்றுகின்றேன்.

இந்நூலினை உடனடியாகக் கணிப்பொறி வழி அச்சிட்டு வெளியிட உதவிய நூலகத்தின் நிருவாக அலுவலர் திரு. என். தியாகராஜன், எம். ஏ., பி. எல்., அவர்களுக்கும், வெளியீட்டு மேலாளர் திரு அ. பஞ்சநாதன் எம். ஏ., எம். எல். ஐ, எஸ்., அவர்களுக்கும், அச்சக மற்றும் நூற்கட்டுப் பிரிவினருக்கும், ஏனைய நூலகப் பணியாளர்களுக்கும் என் பாராட்டுக்கள்.

**து. நா. இராமநாதன்,** இ. ஆ. ப.,

*மாவட்ட ஆட்சித் தலைவர்*
*மற்றும் இயக்குநர்,*
*சரசுவதி மகால் நூலகம்.*

*தஞ்சாவூர்.*
*3—1—99.*

# பொருளடக்கம்


| | பக்க எண் |
|---|---|
| பதிப்பாசிரியர் உரை | i |
| அணிந்துரை | iii |
| ஆசிரியர் உரை | v |
| அறிமுகம் | 1 |
| கோயில் அரும்பொருட்களின் வகைகள் | 5 |
| பாதிப்புக் கூறுகள் | 8 |
| பாதுகாப்பு முறைகள் | 14 |
| தடுப்புப் பாதுகாப்பு செயல்பாட்டுக் கோட்பாடுகள் | 24 |
| நினைவுச் சின்னங்கள், இடங்கள் மற்றும் அரும்பொருட்கள் தொடர்பான சட்டங்கள் | 27 |
| பாதுகாப்பு முறைகள் | 29 |
| குறுக்கீட்டுப் பாதுகாப்பு | 31 |
| சீரமைப்பு | 41 |
| சில குறிப்புகள் | 42 |

**சு. ரங்கமணி,** இ.ஆ.ப.,
அருங்காட்சியகங்களின்
முதன்மை ஆணையர்.

அரசு அருங்காட்சியகம்,
சென்னை-600 008.

22.12.98

# அணிந்துரை

தமிழ்நாடு முழுவதிலும் கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதல் கட்டப்பட்ட கோயில்கள் ஆயிரக் கணக்கில் பரம்பிக்கிடக்கின்றன. கோயில்கள் பாறைகளைக் குடைந்தும், கற்களையும் சுண்ணாம்பு சாந்தையும் பயன்படுத்திக் கட்டியும், செங்கற்களாலும் சாந்தாலும் கட்டியும் வழிபாட்டுத் தலங்களாக பயன் படுத்தப்பட்டன. கோவில்களை இன்றைய சூழ்நிலையில் அருங்காட்சியகங்கள் என்றே சொல்லலாம். அருங்காட்சியகங்களில் காணப்படும் சிற்பங்கள், ஓவியங்கள் போன்றவை சுற்றுச் சூழலை இழந்து தனித்து நிற்கின்றன. ஆனால் கோயில்களில் அந்த கலைப் பொருட்கள் அதனதன் இடங்களிலே பேணப்படுவதால் கோயில்களுக்கு "உயிர்க் கலைக் காட்சியகம்" என்று சொல்லலாம். கோயில்களில் கையாளப்படும் சில வழிப்பாட்டு முறைகள், "சடங்காச்சாரங்கள், பாதுகாப்பு முறைகள், அறிவியல் முறைப்படி ஆய்வகங்களில் பயன்படுத்தப்படுகின்றன. சமணக் கோயில்கள், சைவக் கோயில்கள், வைணவக் கோயில்கள், கிறித்தவக் கோவில்கள், மசூதிகள் போன்றவை தங்களத்தே அந்தந்த சமய வழிபாடுகளுக்கேற்ற வழிபாட்டுப் பொருட்களை அடக்கி உள்ளன.

கற்களால் கட்டப்பட்ட கோயில் சுவர்களில் கோயில் தொடர்பான கல்வெட்டுகளும், சுவர்களிலும் விதானங்களிலும் சுவர் ஓவியங்களும் அற்புதமான சிற்பங்களும், செப்புப் பட்டயங்களும், வாகனங்களும், ஆடை ஆபரணங்களும், மரக்கதவுகளும், தேர்களும், அரிய செல்வங்களாக மிளிர்கின்றன. பொதுவாக நமது சிறப்புகளை மற்றொருவர் சொல்லும்போதுதான் நமக்குத் தெரியும். வெளிநாட்டவர் சொல்லும்போதுதான் அவற்றைப் போற்றுகிறோம்; பேணுகிறோம்.

தமிழ்நாட்டில் கோயில் பொருட்களின் மேல் மக்களுக்குத் தனி மரியாதை உண்டு. இருப்பினும் சிலர் அவற்றைப் பாதுகாக்கும் முறை தெரியாமையால் அவர்கள் முன்னிலையிலேயே அவை அழிகின்றன. பொருட்கள் தகுந்த பாதுகாப்பு இல்லாமையால் திருடப்படுகின்றன; சில நாடு கடந்து செல்கின்றன; சுற்றுச் சூழலால் பாதிக்கப்படுகின்றன.

அருங்காட்சியகத் துறை 1930–லிருந்தே கோயில் அரும்பொருட்களைப் பாதுகாப்பதிலும் வழி முறைகளைக் கற்றுத் தருவதிலும் முனைந்து செயல்பட்டு வருகிறது. 1996–இல் கோயில் செயல் அலுவலர்களுக்கு "கோயில் அரும்பொருட்கள் பாதுகாப்பு" பயிற்சியை ஒரு வார காலம் இத்துறை நடத்தியது. இதனால் பயிற்சி பெற்ற அலுவலர்கள் இத்துறையுடன் தொடர்பு கொண்டு அரும்பொருட்களைப் பாதுகாப்பதில் ஈடுபட்டுள்ளனர்.

அரும்பொருட்களைப் பாதுகாப்பதில் தனி ஆர்வம் காட்டும் முனைவர் வே. ஜெயராஜ், கோயில் அரும்பொருட்களுக்கு ஏற்படும் பாதிப்புகள், பொருட்களின் வகைகள், பொருட்களின் பாதுகாப்பு முறைகள், பாதுகாப்புச் சட்டங்கள் ஆகியவற்றைப் பாமர மக்கள் புரிந்து கொள்ளும் வகையில் சுவைபட எழுதியுள்ளார். இத்துறைக்குப் பெருமை சேர்த்து, பொது மக்கள் பயனுற தமிழில் எழுதியிருக்கும் இந்நூலை, தஞ்சாவூர் மகாராஜா சரபோஜி சரஸ்வதி மஹால் நூலகம் வெளியிட முன் வந்திருப்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்று. 32வது தேசீய வேதியியப் பாதுகாப்பு கருத்தரங்கில் வெளியிடப்படுவது இன்னும் சிறப்பாகும். நூல் வெளியீட்டாளரையும், நூல் ஆசிரியரையும் பாராட்டி மகிழ்கிறேன்.

**சென்னை-600 008,** **ஒப்பம்**
**நாள் : 28.12.98** **(சு. ரங்கமணி, இ.ஆ.ப.)**

# ஆசிரியர் உரை

கலைப் பொருட்களைப் பேணுவதில் இந்திய மக்கள் தனி ஆர்வம் காட்டி அவற்றை யாவரும் கையாளும்படி சமயத் தொடர்புடைய ஒரு முறையாக்கி விட்டனர். இன்றும் அவை கோயில்களில் நடைமுறையில் உள்ளன. பல்வேறு பாதுகாப்பு முறைகள் "சடங்காச்சாரங்கள்" என்ற எண்ணத்தால் கைவிடப் பட்டுள்ளன. ஆனால், அறிவியல் ரீதியாக பல்வேறு பாதுகாப்பு முறைகள் இன்று புத்துயிர் பெற்று ஆய்வகங்களில் நடைமுறைப்படுத்துப்பட்டு வருகின்றன. இவ்வித பணிகளில் சென்னை அரசு அருங்காட்சியக வேதியியப் பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி ஆய்வகம் முனைப்புடன் செயல்பட்டு வருவதால் சென்னைப் பல்கலைக்கழகத்தால், "பிஎச்.டி." பட்டத்திற்கான ஆய்வுகள் மேற்கொள்ள, ஒப்புதல் பெற்றுள்ளது.

1930–ஆம் ஆண்டிலேயே இவ்வாய்வகக் காப்பாட்சியர் முனைவர் எஸ். பரமசிவன் பல்வேறு கோயில்களில் உள்ள சுவரோவியங்களைப் பாதுகாப்பதில் ஈடுபட்டு, தனித்தன்மையினைப் பெற்று அதன் வழி "டி.எஸ்ஸி" என்ற பட்டமும் பெற்றார். அதனைத் தொடர்ந்து முன்னாள் இயக்குநர் திரு. நீ. ஹரிநாராயணா, முன்னாள் துணை இயக்குநர் திரு. சு. தங்கவேலு ஆகியோர் இவ்விதப் பணிகளில் ஈடுபட்டனர்.

நான் இவ்வாய்வகப் பொறுப்பை எடுத்த பின்னர் தனி ஒரு மனிதனால் தமிழகத்தில் பரந்து கிடக்கும் கோயில்களில் உள்ள அரும்பொருட்களைப் பாதுகாக்க முடியாது என்ற உண்மையை அறிந்ததால் பாதுகாப்புக் கருத்துக்க்ளைப் பரப்பினால் அனைவரும் பயனடையும் பொருட்டு சிந்திக்க ஆரம்பித்தேன். அதனுடைய பயனே பயிற்சி வகுப்புகள்.

பள்ளி, கல்லூரி மாணவ மாணவியருக்கு பாதுகாப்புப் பயிற்சிகளை அளித்து, கோயில் அரும்பொருட்களைப் பாதுகாக்க உதவினேன். நூற்றுக் கணக்கான மாணவ மாணவியர் முன் வந்தனர். கடலூர் பாடலீசுவரர் கோயில் பராமரிப்பில் 500 பள்ளி மாணவ மாணவியர் பயன்படுத்தப்பட்டு, கோயில் தரை, விதானம், மற்றும் பொருட்கள் தூய்மை செய்யப்பட்டன. ஸ்டெல்லா மாரிஸ் கல்லூரி மாணவிகளைக் கொண்டு சென்னை, அரும்பாக்கம் ஏகாம்பரீசுவரர் கோயில் தூய்மைப் பணியும், தூய ஜார்ஜ் கதீட்ரல் தேவாலயத் தூய்மைப் பணியும் மேற்கொள்ளப்பட்டன. இன்னும் பல......

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் அழைப்பின் பேரில் பல்வேறு கோயில்களில் உள்ள சுவரோவியங்கள் பாதுகாக்க ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு அத்துறை பணிகளை மேற்கொள்ளும் வண்ணம் வழங்கப்பட்டன.

கோயில் அலுவலர்கள் பாதுகாப்பு முறைகளை அறிந்து கொண்டால் பல்வேறு கோயில் அரும்பொருட்களைப் பாதுகாக்க முடியும் என்ற கருத்தின் அடிப்படையில் பத்து முதுநிலை கோயில் செயல் அலுவலர்களுக்கு 1996-ல் ஒரு வார காலத்திற்கு பயிற்சியளிக்கப்பட்டது. இதனால் மேலும் அருங்காட்சியகத் துறையுடன் பலர் தொடர்பு கொண்டு பயன்பெற்று வருகின்றனர்.

பல்வேறு கோயில்களுக்குச் சென்று வந்தபோது அரும்பொருட்களுக்கும் கோயில் கட்டடங்களுக்கும் இழைக்கப்படும் பல்வேறு இன்னல்களைக் கண்ணுற்ற எனக்குள் ஒரு நூல் எழுதி வெளியிட்டால் நலம் பயக்குமே என்ற எண்ணம் வந்தது. 32வது தேசிய பாதுகாப்புக் கருத்தரங்கு "கோயில் அரும்பொருட்கள் மற்றும் கையெழுத்துப் பிரதிகள் பாதுகாப்பு" என்ற தலைப்பில் 1999 ஜனவரி 7-9 வரை நடைபெற இருப்பதை ஒட்டி தஞ்சாவூர் மகாராஜா சரபோஜி சரஸ்வதி மகால் நூலக இயக்குநரும் மாவட்ட ஆட்சித் தலைவருமான திரு. து.நா. இராமநாதன், இ.ஆ.ப., அவர்கள் அருங் காட்சியகங்களின் முதன்மை ஆணையர், திரு. கு. ரங்கமணி, இ.ஆ.ப., அவர்களை [illegible] ஒரு நூல் எழுதித் தரக்கேட்டபோது என் எண்ணம் நிறைவேற முதன்மை ஆணையர் உதவினார். சரசுவதி மகால் நூலகமே "கோயில் அரும்பொருட்கள் பாதுகாப்பு" என்ற நூலை வெளியிட முன் வந்தது மிகுந்த மகிழ்ச்சி. இந்நூல் சமணக் கோயில்கள், சைவம் மற்றும் வைணவக் கோயில்கள், கிறித்தவக் கோயில்கள் மற்றும் மசூதிகளில் பயன்படுத்தப்படும் வழிபாட்டுப் பொருட்களைப் பாதுகாக்க வேண்டியதின் தேவையையும் பொருட்களை அழிவிலிருந்து பாதுகாக்கத் தொடர வேண்டிய முறைகளையும் தாங்கி வருகிறது. மிகக்குறுகிய காலத்தில் எழுதப்பட்ட இந்நூலைப் படிக்கும் அன்பர்கள் இந்நூலின் குறைகளைச் சுட்டிக் காட்டினால் மறுபதிப்பில் அக்குறைகளை நீக்கலாம் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்நூல் வெளிவர உதவிய அனைத்து அலுவலர்களுக்கும், நண்பர்களுக்கும் குடும்பத்தாருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூல் வெளிவர உதவி ஆசிரியராக இருக்கும் திரு. ப. பெருமாள், சரஸ்வதி மகால் நூலக பாதுகாப்பாளருக்கும் கணிப்பொறி அச்சு கோப்பாளர், சென்னை, ராகுல் கிராபிக்ஸ் நிறுவனத்தாருக்கும் எனது நன்றி உரித்தாகட்டும்.

சென்னை-600 008. வே. ஜெயராஜ்
24.12.98 ஆசிரியர்

# அறிமுகம்

கோயில்கள் என்றதுமே நம் நினைவுக்கு வருவதெல்லாம் வானளாவிய பரந்த தஞ்சாவூர் பெருங்கோயில்தான். இதுபோன்ற ஆயிரக்கணக்கான கோயில்கள் தமிழகத்தில் பரம்பிக்கிடந்து தங்களகத்தே அரும்பெரும் செல்வங்களாகிய கலை மற்றும் பண்பாட்டுப் பொருட்களை தக்கவைத்து, பாதுகாத்து வருகின்றன. சொல்லப்போனால் இக்கோயில்களை, கலைகள் பேணும் நிலையங்கள் எனச் சொல்லலாம். தமிழகத்தில் சமணக் கோயில்கள், சிவன் மற்றும் வைணவக் கோயில்கள், கிறித்துவத் தேவாலயங்கள், முகலாய மசூதிகள் ஆகியவை சமய வழிபாடுகளுக்கேற்ற பலதரப்பட்ட பொருட்களைத் தங்களகத்தே தாங்கி நிற்கின்றன.

காலப்போக்கில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட திருத்தலங்கள் பல்வேறு சூழ்நிலைகளில் கலை இழந்தும், பலனற்றும், சிதைந்தும் வருகின்றன. மழை, காற்று, வெப்பம், பூகம்பங்கள், மின்னல், காளான்கள், பூச்சிகள், மனித இனம் ஆகியவற்றால் ஏற்படக்கூடிய அழிவுகள் யாவரும் அறிந்ததே. மண்ணிலிருந்து உருவாக்கப்பட்ட பொருட்கள் முனைந்து மறுபடியும் மண்ணுக்கே திரும்புகின்றன. மனிதனுடைய அறியாமையினால் சிதைந்து வரும் கலைச் செல்வங்கள் ஏராளம். ஆயிரக்கணக்கான கோயில் அரும்பொருட்கள் மக்களின் ஏழ்மையின் காரணமாகவும், சிலரது பண ஆசையின் காரணமாகவும் கடல் கடந்து போய் நம்மை ஏமாற்றி விட்டன. அவற்றிற்கு கால்கள் இருக்கின்றனவோ இல்லையோ; அவைகள் அசுர வேகத்தில் நம்மை விட்டு ஓடிக் கொண்டிருக்கின்றன.



அருங்காட்சியக ஆய்வகம், சென்னை

அரும்பொருட்களையும் கலைச் செல்வங்களையும் பாதுகாக்க அரசியல் சட்டங்கள் பல உள்ளன. திருடர்களிடமிருந்து பாதுகாக்க, பாதுகாப்பு மையங்கள் பல உண்டு. சிதைந்தவற்றைச் சீரமைத்துப் பாதுகாக்க சீரமைப்பு ஆய்வகங்களும் உண்டு. பரந்த தமிழகத்தில் சிதறிக் கிடக்கும் கலை, பண்பாட்டுச் செல்வங்களை பாதுகாத்து, வருங்கால தலைமுறையினருக்கு வைத்து வைக்க நூற்றுக்கு மேற்பட்ட அருங்காட்சியகங்களும் உண்டு. சென்னை அரசு அருங்காட்சியகத்தின் வேதியியப் பாதுகாப்பு ஆய்வகம் 1930-ஆம் ஆண்டிலிருந்தே கோயில் அரும்பொருட்களைப் பாதுகாப்பதில் தனிக்கவனம் செலுத்தி வருகிறது.

என்னதான் சட்டமிருந்தாலும், எவ்வளவுதான் பாதுகாப்பு இருந்தாலும், எவ்வகையாக பாதுகாக்க முயற்சித்தாலும் தனி மனிதன் ஒருவனுக்கு நமது கலை, பண்பாட்டுச் செல்வங்களை பாதுகாக்க வேண்டுமென்ற உணர்வும், உயிர்துடிப்பும் இல்லையே! தனி மனிதனுக்கு இவற்றைப் பாதுகாக்கும் ஆர்வம் இல்லாவிட்டால் பயனில்லை. இந்நூலைப்படிக்கும் ஒவ்வொருவரும் பாதுகாப்பு சிந்தனையைப் பெற்றுக் கொள்ளும் வண்ணம் இந்நூலில் பல்வேறு செய்திகள் இடம் பெற்றுள்ளன.

## பாதுகாப்பு முறைகள்

பாதுகாப்பு என்ற சொல் இன்று நிலவி வரும் சூழலில் அதிகக் கவனம் செலுத்தப்படும் ஒன்றாகும். அரும் பொருட்கள், கலை மற்றும் பண்பாட்டுப் பொருட்கள் பாதுகாப்பு என்பது வளர்ந்து வரும் அறிவியல் சார்ந்த துறையாகும். நம்மை விட அதிகக் கவனம் செலுத்தியவர்கள் நமது முன்னோர்கள், கோவில்களைப் பராமரிக்கும் முறைகள், சிற்பங்களைப் பராமரிக்கும் முறைகள் ஆகியவற்றை அறிந்து, அவற்றைப் பாதுகாத்து வந்தமையால் இன்றும் அவை காணக்கிடக்கின்றன.

## பாரம்பரிய பாதுகாப்பு முறைகள்

இந்திய நாடு தன்னகத்தே தொன்றுதொட்டே பல்வேறு பாரம்பரியமான பாதுகாப்பு நெறி முறைகளைக் கைக்கொண்டு வருவது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். பொதுவாகத் தாவரங்களின் பல்வேறு பகுதிகள் பூச்சிக் கொல்லிகளாகவும், காளான் கொல்லிகளாகவும் பயன்படுத்தப்பட்டு, பண்பாட்டுச் செல்வங்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. வெட்டி வேர், வேப்பிலை, அதிமதுரப்பட்டை, 'சிட்ரோனில்லா' எண்ணெய், எலுமிச்சைப் புல் எண்ணெய் போன்றவை காலாகாலமாக அன்றாட பொருட்களைப் பேணும் அருமருந்தாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. செப்புத் திருமேனிகளைப் பாதுகாக்க எண்ணெய், மாவு, சாம்பல், சந்தனத்தூள் ஆகியவை பயன்படுத்தப்பட்டுள்ளன. எண்ணெய் காப்பு, மாவுக்காப்பு, சந்தனக்காப்பு, அன்னக்காப்பு போன்ற காப்பு முறைகள் இன்றும் கோயில்களில் பயன்பட்டுவருவது நாம் அறிந்த உண்மை. இம்முறைகள் காலவரையிடப்பட்டு செயல்படுத்தபடுகின்றன. இந்த முறையே இன்று பயன்படுத்தப்படும் காகிதக் கூழ் ஒட்டுமுறையாக பல்வேறு நாடுகளில் பயன்படுத்தப்படுகிறது. வழிபாட்டுத் தலங்களில் உள்ள கற்சிற்பங்கள் பொதுவாக எண்ணெய், பால், வெண்ணெய், நெய் போன்ற கொழுப்புப் பொருட்களினால் 'அபிஷேகம்' என்ற சடங்காச்சாரப் போர்வையில் பாதுகாக்கப்படுகின்றன. ஆண்டாண்டாக இவ்விதமான கொழுப்பு பொருட்கள் கற்சிற்பங்கள் மேல்

பூசப்படுவதால் சிற்பங்கள் மீது கருமையான பிண்ணாக்கு போன்ற பொருட்கள் உருவாகி கற்சிற்பங்களின் அழகைச் சிதைத்து, சிற்பங்களின் ஆயுளையும் குறைக்கின்றன. இவ்விதமான கருப்பு அழுக்குகள் புளியங்கொட்டையை அரைத்து நீருடன் கலந்து சிற்பத்தின் மேல் பூசி, காய்ந்தபின் அகற்றப்பட்டு, தூய்மை செய்யப்படுகின்றன. இவ்வித முறையினால் உலோகத் திருமேனிகள் சுற்றுச் சூழலில் உள்ள எவ்வித பொருட்களினாலும் பாதிக்கப்படுவதில்லை. கோயில்களின் வரலாற்றை விளக்கும் தல புராணங்கள் பல்லாண்டுகளாகக் கோயில்களில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. பெருவாரியான கோயில்களில் தலபுராணம் ஓலைச் சுவடிகளில் எழுதப்பட்டுப் பாதுகாக்கப்பட்டு உள்ளன. இவ்விதமான ஓலைச் சுவடிகளைப் பூச்சிகளிடமிருந்தும் பூஞ்சக் காளான்களிடமிருந்தும் பாதுகாக்க, மஞ்சள் பசை பூசப்பட்டது. உலர்த்தப்பட்ட வேப்பிலை, வெட்டி வேர் முதலியன கொண்டும் பாதுகாக்கப்பட்டன. பூச்சிகளிடமிருந்து பாதுகாக்க ஓலைச் சுவடிகள் சிவப்பு நிற பட்டுத் துணிகளினால் மூடிக் கட்டப்பட்டன. பூச்சிகளுக்கு சிவப்பு நிறம் அதிர்ச்சியைக் கொடுத்து விரட்டும். இன்றுகூட பூச்சிகளிடமிருந்து பொருட்களை காப்பாற்றவும் தூங்கும் அறைகளில் பூச்சிகள் வராமல் இருப்பதற்கும் சிவப்பு விளக்குகளைப் பயன்படுத்துகிறோம்.

ஆண்டுதோறும் "விஜயதசமி" அன்று ஓலைச்சுவடிகள் வெளியே எடுக்கப்பட்டு, தூய்மைசெய்யப்பட்டு, வழிப்பாட்டுடன் நிழலில் உலர்த்தப்பட்டு, மறுபடியும் கட்டி, பரணில் வைக்கப்படும் பழக்க ம் பரவலாகத் தமிழகத்தில் நிலவி இருந்தது. பாரம்பரிய முறைப்படி பலர் பின்னிட்டு சென்று அவற்றை ஆற்றில் போட்டுவிட்டுத் திரும்பிப் பார்க்காமல் வீட்டிற்கு வந்துள்ளனர். ஓலைச்சுவடிகளைப் பீடைகளாகவே கருதி அழித்துள்ளனர். நானே அனேக ஓலைச்சுவடிகளைக் கிணற்றில் மிதக்கப் பார்த்திருக்கிறேன். ஈரோடு மாவட்டத்தில் ஏறத்தாழ 120 கட்டு ஓலைச் சுவடிகளைச் சேமித்துள்ளேன். இன்று அவை ஈரோடு அருங்காட்சியகத்தில் உள்ளன. கோயில் தேர்கள் விழாக் காலங்களில் தெய்வங்களின் உருவங்களை அவற்றில் வைத்து மக்களால் இழுக்க பயன்படுத்தப்பட்டன. விழாக்காலங்களுக்கு முன்பதாக மரச்சிற்பங்களைப் பாதுகாக்கும் பொருட்டு இலுப்பை எண்ணெயைப் பூசுவார்கள். இலுப்பை எண்ணெயைப் பூசுவதினால் மரமும் வெடிக்காது; பூச்சிகளும் அவற்றைத் தாக்காது. வெயிலினாலும் மழையினாலும் பாதிக்காமல் இருக்கவும், தூசு படியாமல் இருக்கவும், விழாக்காலம் முடிந்த பின்பு தேரினை ஓலையால் வேய்ந்து பாதுகாப்பாரும் உண்டு; ஓட்டுக் கட்டடத்துக்குள் நிறுத்தி மூடி வைப்பாரும் உண்டு; நாகத் தகடுகளால் மூடி வைப்பாரும் உண்டு. எண்ணெய் பூசுவதனால்

தூசுகள் ஈர்க்கப்பட்டு சிற்பங்கள் மீது பிண்ணாக்கு போன்று உறுதியான அழுக்கு ஏற்படும்போது தயிரைத் தோய்த்துத்தூய்மை செய்வர்.

## சுற்றுச் சூழல் பாதுகாப்பு

கோயில்களில் ஆள் நடமாட்டம் இல்லாத பகுதிகளில் வௌவால்கள் மற்றும் உயிரினங்கள் வளர்ந்து அப்பகுதிகளில் உள்ள பொருட்களைப் பாதிக்கும் நிலையிலிருந்து தடுக்க கோயில்களில் கற்பூரம், சூடம் போன்ற பொருட்களை எரித்து புகைப்பது வழக்கம். கோயில்களைச் சுற்றிலும் மரங்கள் வளர்க்கப்பட்டும் உயரமான கூரைகள் அமைத்தும் கோயிலின் உட்பகுதி வெப்பம் இன்றி பாதுகாக்கப்பட்டன. இன்று கோயில்களின் கூரைகள் அவ்வளவு உயரமாக அமைக்கப்படுவதில்லை. தரையைத் துப்புரவு செய்யும் போது தூசு மேலே பறந்து மறுபடியும் கோயில் பொருட்கள் மீது படராதவாறு இருக்க தரையில் தண்ணீர் தெளித்த பின்பே தரையைத் தூய்மை செய்தனர். தமிழகத்தில் பெரும்பாலும் இம்முறை இன்றும் பின்பற்றப்படுகிறது.

பல்வேறு விதமான பாரம்பரியப் பாதுகாப்பு முறைகள் தொன்றுதொட்டே வழக்கத்தில் இருந்து வருகின்றன. திரிபந்தனம் மற்றும் அட்டபந்தனம் போன்ற பசைக் கலவைகள் தொல் தமிழ்க்காலம் தொட்டே புழக்கத்தில் இருந்து வருகின்றன. "சுக்கான், தூள் சர்க்கரை, தொல் பேயன் நற்கனியும் ஒக்கக் கலந்தமைத்தால் ஊர திரிபந்தனம் ஆயின்" என்று திரிபந்தனம் செய்முறைப் பற்றி கூறப்படுகிறது. "கொம்பரக்கு சுக்கான் தூள் குங்கலியம் கற்கவை சம்பங்கி வேதுலிங்கம் தேன்மெழுகு தாம்பழுத்து நீங்கு எருமை, வெண்ணெய் குட்டி நான்கெடுத்து ஆக்கல் அட்ட பந்தனமாம்" என்பது அட்டபந்தனம் தயாரிக்கும் முறை ஆகும்.

# கோயில் அரும்பொருட்களின் வகைகள்

மதச் சார்புடைய நிறுவனங்கள் மற்றும் கோயில்களில் அந்தந்த மதச் சடங்காச்சாரங்களுக்கு ஏற்ற வழிபாட்டுப் பொருட்கள் உள்ளன. கட்டடங்கள் மிகச் சிறந்த பங்கு வகிக்கின்றன. கட்டடங்கள் அமைக்க பயன்படுத்தப்பட்ட பொருட்கள் பல்வேறு தரப்பட்டவை. கோயில்களில் வழிப்பாட்டுக்குப் பயன்படும் பொருட்களும் பலத்தரப்பட்டவையாகும். பௌத்தம், சமணம் போன்ற மதச் சார்புடைய கோயில்கள் பெரும்பாலும் குகைக்கோயில்களாகவோ அல்லது கற்களால் அமைக்கப்பட்ட கோயில்களாகவோ அமைந்திருந்தன. சிற்பங்கள் பெரும்பாலும் கருங்கற்கள், சுண்ணாம்புக் கற்கள், மலைவைக் கற்கள் போன்ற கற்களாலும் வெண்கல உலோகத்தாலும் அமைக்கப்பட்டவைகளாகவும் இருந்தன. மூலத்தானங்களில் கல் அல்லது மரச் சிற்பங்கள் பயன்படுத்தப்பட்டன. வழிப்பாட்டு பொருட்களாகச் சுவர்களிலும் விதானங்களிலும் ஓவியங்கள் தீட்டப்பட்டு இன்றும் அவை காட்சியளிக்கின்றன. சிலக் கோயில்களில் அந்தச் சிற்பங்கள் வண்ணங்களால் தீட்டப்பட்டு அழகாக மிளிர்கின்றன. உட்புற மற்றும் வெளிப்புறச் சுவர்களில் பல்வேறு புராணச் சம்பவங்களை விளக்கும் கல்வெட்டுகளும் அமைந்துள்ளன. வழிப்பாட்டுப் பொருட்களாகிய மணிகள், விளக்குகள், பாத்திரங்கள், புராணங்களை விளக்கக் கூடிய சுவடிகள், செப்புப் பட்டயங்கள், வெண்சாமரங்கள், மரத் தளவாடங்கள் போன்றவை காணப்படுகின்றன.

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கீழ் ஏறத்தாழ 35,000 கோயில்கள் தமிழ் நாட்டில் இயங்கிவருகின்றன. இந்து சமயக் கோயில்கள் பெரும்பாலும் செதுக்கப்பட்ட கற்களாலும் சுதையாலும் அமைக்கப்பட்டவை களாகவோ செதுக்கப்பட்ட வைகளாகவோ, செங்கலாலும் சுண்ணாம்புச் சாந்தாலும் கட்டப்பட்டு, சுண்ணாம்புச் சாந்தால் உட்புறமும், வெளிப்புறமும் பூசப்பட்டவை களாகவும் காணப்படுகின்றன.

பெரும்பாலும் செதுக்கப்பட்ட கற்களால் கட்டப்பட்ட கோயில் சுவர்களில் பல்வேறு செய்திகள் கல்வெட்டுகளாக அமைந்துள்ளன. விதானங்களிலும் சுவர்ப்புறங்களிலும் வண்ண ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. விழாக்காலங்களில் தெய்வங்களின் சிலைகளை அலங்கரிக்கப்பட்ட தேர்களில் வைத்து இழுத்துச் செல்லும் பழக்கம் நம் நாட்டில் குறிப்பாக தமிழ்நாட்டில் இன்றும் காணப்படுகிறது. இப்பழக்கம் கத்தோலிக்க கிறித்தவ ஆலய விழாக்களிலும் பழக்கத்தில் உள்ளது.

தேர்களில் பல்வேறு புராணக்கதைகளை விளக்கும் சிற்பங்கள் அடுக்கு அடுக்காக பொருத்தப்பட்டுள்ளன. அலங்கரிக்கப்பட்ட தேரில் துணி, தொங்கு திறை, தொங்கட்டான், கொடி மற்றும் குதிரை போன்ற பொம்மைகள் பொருத்தப் பட்டிருக்கும். இரும்பாலான அச்சு ஆணிகள், வர்ணங்கள் தேரின் பாதுகாப்புக்கு ஏற்றவை. கோயிலின் உள்ளே விளக்குகள், மணிகள், பாத்திரங்கள், தட்டுகள், சங்குகள், தூபக் கரண்டிகள், வெண்கலச் சிற்பங்கள், மரத்தாலான பெரிய கதவுகள், வாகனங்கள் இசைக்கருவிகள், தங்க வைர நகைகள், ஆயுதங்கள், ஈட்டிகள், கொடிமரம் போன்றவை வழிப்பாட்டுப் பொருட்களாகக் காணப்படும். கிராமத் தேவதைகளின் கோயில்கள் பல ஆயுத சாலைகளோ என ஐயுறும் வண்ணம் இன்றும் காட்சியளிக்கின்றன. பலக்கோயில்களில் தலப்புராணங்கள் மற்றும் நிலபுலன்கள் தொடர்பான ஆவணங்கள் ஓலைச்சுவடிகளில் எழுதப்பட்டு பாதுகாக்கப்படுகின்றன. பிற்பட்டக் காலத்திய கோயில்களில் தஞ்சாவூர் ஓவியங்கள், எண்ணெய் வண்ண ஓவியங்கள், புகைப்படங்கள் போன்றவையும் காணப்படுகின்றன.

கிறித்தவத் தேவாலயங்கள் பொதுவாக செங்கற்களாலும், சுண்ணாம்புச் சாந்தாலும் கட்டப்பட்டுள்ளன. சில கோயில்கள் இந்து சமயக் கோயில்களின் அமைப்புடன் கற்களால் மட்டும் கட்டப்பட்டுள்ளன. நெடுங்கோபுரங்கள் பல தேவாலயங்களில் உண்டு. சாரளங்கள், கதவுகள் போன்றவை மரங்களாலேயே அமைக்கப்பட்டு இருக்கின்றன. ஆங்காங்கே சாரளங்கள் மற்றும் கதவுகளுக்கு மேலுள்ள பகுதிகளில் வண்ணக் கண்ணாடிகள் பல்வேறு வடிவமைப்புகளைத் தாங்கி அழகுடன் காணப்படுகின்றன.

வழிப்பாட்டுப் பொருட்களாக விளக்குகள், இசை கருவிகள், ஆவணங் கள், சுதைச் சிற்பங்கள், கற்சிற்பங்கள், கான்கிரிட் சிற்பங்கள், தொட்டிகள், பெரிய வெண்கல மணிகள், நாற்காலிகள், மேஜைகள், விரிப்புகள், சுவர் ஓவியங்கள், எண்ணெய் வண்ண ஓவியங்கள், புகைப்படங்கள் போன்றவை காணப் படுகின்றன.

முகமதியரின் வழிப்பாட்டுத் தலங்களாகிய பள்ளிவாசல் மற்றும் தர்காக்கள் செங்கல் மற்றும் சாந்து அல்லது காங்கிரிட்டால் அமைக்கப்பட்டிருக்கும். சாம்பிராணிக் கூண்டு, பாஞ்சாக்கள், ஆயுதங்கள், குர்ரான் தாங்கி, கல்தொட்டிகள், விரிப்புகள் போன்றவை வழிப்பாட்டுப் பொருள்களாக இன்றும் காணப்படுகின்றன.

எந்தவிதமான மதச்சார்புடைய கோயில்களாக இருந்தாலும் கோயில் பொருட்களை நான்கு வகைகளாகப் பிரிக்கலாம். அவை கீழ்வருமாறு:

1. கரிமப் பொருட்கள்

2. அகரிமப் பொருட்கள்

3. உலோகங்கள்

4. ஓவியங்கள்

எந்த சமயச் சார்புடைய கோயில்களில் உள்ள பொருட்களாயினும் அவை மேற்கூறிய ஏதாவது ஒரு வகையைச் சார்ந்தவையாகவோ அல்லது ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வகையிலான பொருட்களால் அமைந்த தாகவோ இருக்கும்.

# பாதிப்புக் கூறுகள்

கோயில் கட்டுமான பொருட்கள் மற்றும் கோயில் வழிப்பாட்டுப் பொருட்கள் அவற்றைச் சூழ்ந்துள்ள காற்று மண்டலத்திலுள்ள கூறுகளினால் பாதிக்கப்படுகின்றன. பாதிப்புக் கூறுகளை இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை இயற்கை விளைவுகள், மனிதனால் ஏற்படும் விளைவுகள்.

## இயற்கை விளைவுகள்

கோயில் கட்டடப் பொருட்கள் மற்றும் கோயில் அரும்பொருட்கள் இயற்கைச் சீற்றத்தினால் வெகுவாக பாதிக்கப்படுகின்றன. பூமி அதிர்ச்சிகள், தீ விபத்து, வெள்ளம், சூறாவளி போன்றவற்றால் எதிர்பாராத பெருத்த சேதங்கள் ஏற்பட்டு கட்டடங்கள் அழிகின்றன.

தாவரங்கள், காளான்கள் போன்ற உயிரினங்கள் கட்டடங்களில் வளர்ந்து கட்டடங்களையும் கோயில் அரும்பொருட்களையும் பாதிக்கின்றன. பலவகைத் தாவரங்கள், மரங்கள் போன்றவை கோயில்களில் வளர்ந்து இடிபாடுகளை உண்டாக்கி கோயில் கட்டடங்களை அழிக்கின்றன. பூஞ்சக் காளான், பாசி போன்றவை சுவர்களில் வளர்ந்து கட்டடங்கள் கருமையாக தோற்றமளிக்கின்றன. பூச்சிகள், வண்டுகள், எலிகள், வௌவால்கள், பாச்சான்கள், கரப்பான்கள், பறவைகள் போன்றவை கோயில்களையும் அரும்பொருட்களையும் அதிகமாகப் பாதிக்கின்றன.

காற்று மண்டலத்திலுள்ள பிராண வாயு, கரியமிலவாயு, கந்தக ஆக்ஸைடுகள், நைட்ரஜன் ஆக்ஸைடு, ஹைட்ரஜன் சல்பைடு போன்ற வாயுக்கள், ஈரம், தூசு, வெப்பம், வெளிச்சம் முதலியவை கோயில் அரும்பொருட்களை வெகுவாகப் பாதிக்கின்றன.

### காற்று

காற்று என்றால் அது மிகவும் பயனுள்ளது என்ற கருத்தே நாம் அறிந்த ஒன்று. ஆனால் அரும்பொருட்களைப் பாதிக்கும் சிறந்தக் கூறுகள் காற்று மண்டலத்தில் உண்டு. பாதிப்புக் கூறுகளை இனம் கண்டு கொண்டால், பொருட்கள் பாதிக்கப்படாமல் பாதுகாக்க முடியும்.

## பிராண வாயு (ஆக்ஸிஜன்)

பிராணவாயு மனிதனுடைய வாழ்விற்கு மிக இன்றியமையாததாகும். அதே வேளையில் அது உலோகங்கள், வண்ணங்கள் போன்றவற்றை எளிதில் பாதிக்கின்றன. எனவே பிராணவாயு பொருட்களைத் தாக்காதவாறு கவனித்துக் கொள்வது நல்லது.

## கரியமில வாயு

எரிபொருட்களை எரிப்பதினாலும் தொழிற்சாலைகளின் புகைப் போக்கிகளிலிருந்தும், வாகனங்களின் புகைகளிலிருந்தும் கார்பன் மோனாக்சைடு, கார்பன் டை ஆக்சைடு போன்ற வாயுக்கள் வெளிவந்து அரும்பொருட்களைப் பாதிக்கின்றன. மழை நீரில் அவை கரைந்து அமில மழையாகவும் மாறுகின்றன.

## கந்தக ஆக்சைடுகள்

கந்தக ஆக்சைடுகள் தொழிற்சாலைகளிலிருந்தும் எரிபொருள் களிலிருந்தும் புகையிலிருந்தும் உருவாகி காற்றிலுள்ள ஈரப்பசையுடன் இணைந்து அமிலங்களாக மாறுகின்றன. இவ்விதமாக உருவாகும் அமிலங்களே மழை காலங்களில் உருவாகும் அமில மழைக்கு அடிப்படையாகும். அமில மழையைத் தடுப்பது கடினம். ஆனால் அமில மழையின் பாதிப்பிலிருந்து கோயில் கட்டடங்களையும் கோயில் அரும்பொருட்களையும் பாதுகாக்க இயலும். பொதுவாக அமில மழையினால் உருவாகும் கந்தக அமிலங்களால் அனைத்துவிதமான கோயில் பொருட்களும் கட்டடங்களும் பாதிக்கப்படுகின்றன. உலோகப் பொருட்களில் அரிப்பு ஏற்படுகின்றது.

## நைட்ரஜன் ஆக்ஸைடுகள்

நைட்ரஜன் டை ஆக்ஸைடு, நைட்ரஜன் திரி ஆக்ஸைடு போன்ற வாயுக்கள் தொழிற்சாலைகளிலிருந்தும், இலைதழை மக்குவதிலிருந்தும் உருவாகி காற்று மண்டலத்தில் கலக்கின்றன. இவ்வாயுக்கள் மழைநீரில் கலந்து நைட்ரச மற்றும் நைட்ரிக் அமிலங்களாக மாறி கோயில் பொருட்களையும் கட்டடங்களையும் வெகுவாகப் பாதிக்கின்றன.

## ஹைடிரஜன் சல்பைடு

அழுகிய பொருட்கள், சாக்கடை போன்றவற்றிலிருந்து ஹைடிரஜன் சல்பைடு வாயு உருவாகிறது. இந்த வாயு பொதுவாக வெள்ளி மற்றும் செம்பு கலந்த உலோகப் பொருட்களுடன் வினை புரிந்து மேற்பகுதி கருப்பு நிறமடைகிறது. இதனைக் கருமை அடைதல் அல்லது மங்குதல் என அழைக்கின்றனர்.

## தூசு

காற்று மண்டலத்தில் தூசு அதிகமாக உள்ளது. இந்தத் தூசு தொழிற்சாலைகளிலிருந்தும் வாகனப் போக்குவரத்து மூலமாகவும் காற்றில் கலந்து காணப்படுகிறது. இது தொழிற்சாலைகள் அதிகமாக உள்ள இடங்களிலும் வாகனப் போக்குவரத்து அதிகமாக உள்ள இடங்களிலும் உள்ள காற்றில் அதிகமாக உள்ளது. தூசு பொருட்கள் மீது விழுவதால் ஈரமான காலங்களில் அவை அழுக்காக மாறி கெட்டியாகி கோயில் பொருட்களை வெகுவாகப் பாதிக்கின்றது. ஓவியங்கள், சிற்பங்கள் போன்றவற்றிலுள்ள விவரங்கள் மறைந்து விடுகின்றன. தூசு பொருட்களில் படாமல் இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## ஈரம்

இடத்திற்கேற்ப காற்றில் உள்ள ஈரப்பதம் மாறுபடும். கடற்கரைகளில் ஈரப்பதம் அதிகமாகவும் உப்பு கலந்ததாகவும் இருக்கும். காற்றிலுள்ள ஈரப்பதத்தில் உப்பும் கலந்திருப்பதால் கட்டடங்கள், பல்வேறு உலோகங்கள் மற்றும் பிற பொருட்கள் மீது பட்டு அவை அழிவுக்கு நேராய் திருப்பப்படுகின்றன. கடற்கரையை விட்டு மிகத்தூரமான உள்நாட்டு பகுதியில் உள்ள இடங்களில் ஈரப்பதம் குறைவாக இருக்கும். ஆறுகள், குளங்கள், வாய்க்கால்கள், நீர்த்தேக்கங்கள் போன்ற இடங்களில் பூமியில் நீர்நிலை மிக உயரமாக இருப்பதால் அப்பகுதியில் உள்ள கட்டடங்களின் சுவர்கள் பூமியிலுள்ள உப்புக்களை நீருடன் உறிஞ்சி, வெப்பத்தால் நீராவி ஆவதால் உப்புக்கள் சுவரில் படிந்து, சுவர்ப்பகுதிகள் பெயர்த்து விழுகின்றன. இதனை 'உவர்ப் பொரிதல்' என்பர். பூமியிலுள்ள நீர் தடுக்கப்பட்டால் கட்டடங்கள் பூமியோடு தொடர்புடைய சிற்பங்கள் போன்ற பொருட்கள் சிதைவிலிருந்து பாதுகாக்கப்படும். மழைக் காலங்களில் கட்டடங்களுக்குள் அதிகமான ஈரப்பதம் உருவாவதால் கோயிலுக்குள் உள்ள பொருட்களும் சுவர் பகுதிகளும் வெகுவாகப் பாதிக்கப்படுகின்றன. மரப்பொருட்கள் நீரை உறிஞ்சுவதால் விரிவடைகின்றன. இதனால் கதவுகளைச் சரியாக மூட முடிவதில்லை. எனவே வண்ணம் தீட்ட வேண்டும். பூஞ்சக்காளான்கள் மிக எளிதில் வளர்கின்றன. பூச்சிகள் உண்ணுவதற்கு ஏதுவாக பொருட்கள் மிருதுவாகின்றன. நீர்க் கசிவினால் சுவர்கள் ஈரமடைந்து சுவரோவியங்கள், விதான ஓவியங்கள் சிதைகின்றன. ஈரப்பதத்தை அளவிட்டு அதனை கட்டுப்பாடு பண்ணினால் கட்டடங்களும் கோயில் அரும்பொருட்களும் சிதையாமல் இருக்கும். ஈரத்தால் எண்ணிறந்த கேடுகள் அரும்பொருட்களுக்கு உண்டாகின்றன. ஈரத்தை அளவிட ஈரப்பதமானி உள்ளது. ஈரப்பதம் 45-லிருந்து 50 விழுக்காடுகள் இருந்தால் பொருட்கள் பாதுகாப்பாக இருக்கும்.

## வெளிச்சம்

வெளிச்சம் உயிரினம் வாழத் தேவை; மனித நடமாட்டத்திற்கும் தேவை பொருட்களைப் பார்க்க வெளிச்சம் தேவை. ஆனால் அதிக வெளிச்சம் பொருட்களைப் பாதிக்கும். வெளிச்சத்திலுள்ள புற ஊதாக் கதிர் வெளிச்சம் வண்ணங்களை வெளிரப்பண்ணும். விளக்குகளால் உருவாகும் வெப்பம் பல்வேறு அரும்பொருட்களைப் பாதிக்கும். ஓவியங்கள், துணியாலான தொங்கட்டான்கள் போன்றவை அதிக வெளிச்சத்தால் பலமிலக்கின்றன; வெளிருகின்றன. எனவே போதுமான வெளிச்சம் மட்டுமிருந்தால் பொருட்கள் பாதிக்கப்படுவதில்லை. ஓவியங்களைப் பொருத்தமட்டில் ஏறத்தாழ 50 லக்ஸ் ஒளி பொருட்களைப் பார்க்கப் போதுமானது. வெளிச்சத்தைக் குறைத்தால் பொருட்களின் காலம் நீடிக்கும். வெளிச்சத்தை அளக்கும் கருவிக்கு 'வெளிச்சமானி' என்று பெயர். புற ஊதாக் கதிர்களை அளவிடும் கருவிக்கு புறஊதாமானி என்று பெயர். இக்கருவிகள் வெளிச்சத்தைக் கட்டுப்படுத்து வதில்லை. ஆனால் வெளிச்சத்தை அளவிட்டு வெளிச்சத்தை தடுக்க உதவிபுரிகின்றன. ஆகவே தான் நம் முன்னோர்கள் ஓவியங்களை அதிக வெளிச்சம் இல்லாத இருட்டான பகுதிகளில் அமைத்தனர்.

## வெப்பம்

வெப்பம் இயற்கையாகவும் செயற்கையாகவும் கோயில்களின் உள்ளே உருவாக்கப்பட்டு அரும்பொருட்கள் அழிய ஏதுவாக இருக்கிறது. சூரிய ஒளி நேரடியாக ஒரு பொருளின் மீது படுவதால் அவைகள் வெப்பம் அடைந்து விரிவடைகின்றன. திடீர் என்று மழை பெய்வதாலோ அல்லது வெப்பமும் குளிரும் மாறி மாறி வருவதாலோ அரும்பொருட்கள் அடிக்கடி விரிவடைவதாலும் சுருங்குவதாலும் சிதைகின்றன. கோயிலினுள் சமையல் வேலை செய்வதாலும் அதிக பிரகாசமுள்ள மின் விளக்குகள் எரிவதாலும் பொருட்கள் விரிவடைந்து சிதைய ஏதுவாகின்றன. வெப்பம் அதிகரிப்பதினால் கரிமப் பொருட்களில் உள்ள நீர் வெளியேற்றப்படுகிறது. இதனால் மரப்பொருட்கள் வெடிக்கின்றன. வெப்பம் குறைவதால் பூச்சிகள் தாக்குகின்றன. வெப்பம் சுற்றுச்சூழலைப் பொருத்து அதிகமாகவோ குறைச்சலாகவோ இருக்கும். வெப்பத்தை அளவிட, பல்வேறு வெப்பமானிகள் உண்டு. பொருட்கள் பாதிக்காமல் இருக்க ஒரு இடத்தின் வெப்பநிலை $19^{\circ} - 20^{\circ}$ சென்டிகிரேட் வரை இருக்கலாம்.

## உயிரினங்கள்

அரும்பொருட்களைப் பாதிக்கும் உயிரினங்களில் தாவரங்கள், பூச்சிகள், ஊர்வன, நடப்பன அடங்கும். தாவர வகையைச் சார்ந்தவை பூஞ்சக்காளான்கள், பாசிகள், சொத்தைகள் ஆகியவை அடங்கும். இவற்றால் பாதிக்கப்பட்ட பொருட்கள் பலமிழக்கின்றன. கட்டடங்களில் பல்வேறு தாவரங்களும் மரங்களும் வளர்ந்து கட்டடங்களைச் சிதைவடையச் செய்கின்றன. வேர்ப்பகுதிகள் கட்டடங்களுக்குள் செல்வதால் அப்பகுதிகள் சிதறி அழிகின்றன.

பல்வேறு புழுக்கள், பூச்சிகள், பறவை இனங்கள் கட்டடங்களையும் அரும்பொருட்களையும் வெகுவாகப் பாதிக்கின்றன. மரங்கள், துணிகள், ஓவியங்கள், ஓலைச்சுவடிகள், தேர்கள் போன்றவை பூச்சிகளால் அதிகம் தாக்கப்படுகின்றன. பொதுவாக அரும்பொருட்களை பாதிக்கும் பூச்சிகள் ஈரமான பொருட்களுக்குத்தான் இடர்பாடு வழங்குகின்றன. புழுக்கள் கூட்டுப்புழுக்களாக உருவாகும்போதுதான் பொருட்கள் மிக அதிகமாக பாதிக்கப்படுகின்றன. இவ்விதமாகப் பாதிக்கப்படும் பொருட்கள் பொதுவாக, சுவடிகள், துணிகள், மரப்பொருட்கள், இசைக்கருவிகள், தளவாடங்கள் போன்றவையாகும். புத்தகப்புழு நூல்களையும், ஓலைச்சுவடிகளையும் தின்னும். இதனால் ஒரு புறமிருந்து மறுபுறம் வரை துவாரங்கள் உருவாகி விடும்.

கரப்பான், பாச்சான், வண்டு போன்றவை கரிமப் பொருட்களின் மேலுள்ள மாவுப் பொருட்களை உண்டு, அரும்பொருட்களைப் பாதிப்பதோடல்லாமல் அவற்றின் மீது தங்களது எச்சத்தையும் விடுவதால் பொருட்கள் வெகுவாகப் பாதிக்கப்படுகின்றன. ஓவியங்கள், துணிகள் போன்றவை மீது கரும்புள்ளிகள் உருவாகின்றன.

அரும்பொருட்களை எலிகள் அதிக அளவில் பாதிக்கின்றன. ஆகாரத்தைத் தேடி அலையும் பொழுது வழியில் இருக்கும் பொருட்களை அவை கடித்துக் குதறுகின்றன; எச்சத்தையும் விட்டு பொருட்களையும் பாதிக்கின்றன. அணில்கள் அரும்பொருட்கள் உள்ள இடங்களில் கூடுகள் கட்டி வாழ்வதால் பொருட்கள் பாதிக்கப்படுகின்றன.

சிட்டுக்குருவி, வௌவால், புறா போன்ற பறவையினங்கள் கேட்பாரற்று இருக்கும் இடங்களில் சுகமாக வாழ்ந்து பொருட்கள் மேல் மனம்போல எச்சத்தை விட்டு பொருட்களைப் பாதிக்கின்றன. அதிர்வுக்கருவி பயன்படுத்தி அவற்றை விரட்டலாம்.

## மனிதர்களால் ஏற்படும் பாதிப்புக்கள்

மனிதக் கரங்களால் உருவாக்கப்பட்ட அரும்பொருட்கள் பல மனிதனாலேயே அழிகின்றன. ஒரு கூட்டம் கோயில் பொருட்களை உருவாக்கி வரும்பொழுது ஒரு பெருங் கூட்டம் அவற்றை அறியாமலும் அறிந்தும் அழித்துக் கொண்டே இருக்கிறது.

## அறியாமையினால் ஏற்படும் விளைவுகள்

பொருட்களின் தன்மைகளை அறியாமலும் அவற்றை பராமரிக்கும் முறையை அறியாமலும் இருந்தால் அவற்றிற்குரிய பொருப்பாளர்கள் மூலமாகவே பொருட்கள் அழியும். பொருட்களின் பாதிப்புக்கூறுகள், பாதுகாக்கும் முறைகள், எதிரிகள், சுற்றுப் புறச் சூழ்நிலைகள், வெப்ப தட்ப நிலை மாறுதல்கள் ஆகியவற்றைத் தகுந்த முறையில் அறிந்து பொருட்களுக்கு ஏற்றவாறும் காலத்துக்கு ஏற்றவாறும் செயல்படுவது அவற்றின் பாதுகாப்பிற்கு உதவி புரியும். எனவே தான் அரும்பொருட்களைப் பாதுகாக்கிறவர்கள் தகுந்த பாதுகாப்புத் தகவல்களை அறிந்திருக்க வேண்டும் எனக்கூறப்படுகிறது. பொருட்களை ஓரிடத்திலிருந்து இன்னொரிடத்திற்குக் கொண்டு செல்லுதல், அவற்றைப் பயன்படுத்துதல், அவற்றைத் தூய்மைப்படுத்துதல், அவற்றைச் சேமித்து வைத்தல் போன்றவற்றில் தனிக்கவனம் செலுத்துதல் வேண்டும்.

## அறிந்து செய்யும் தவறுகள்

கோயிலுக்கு செல்லும் மக்களோ அல்லது அரும்பொருட்களைக் கையாள்பவர்களோ அறிந்தும் பல்வேறு தவறுகளைச் செய்வதுண்டு. உதாரணமாக வழிபாட்டுக்குச் செல்பவர்கள் அல்லது பார்வையிட வந்தவர்கள் ஞாபகார்த்தமாக கோயிலின் உடைந்த பகுதிகளையோ, பகுதியை உடைத்தோ அல்லது சிறிய அரும்பொருட்களையோ அறிந்தே எடுத்துச் செல்வதுண்டு. சிலர் தங்களது பெயர்களைச் சுவர்களிலோ அல்லது அரும்பொருட்களிலோ எழுதி செல்வர். சிலர் வெறியினால் பிற மதத்தைச் சார்ந்த கோயில்களையோ அதைச் சார்ந்த அரும்பொருட்களையோ உடைப்பதும் உண்டு. இவ்விதமான நிகழ்ச்சிகளுக்குப் பல்வேறு உதாரணங்களைக் கொள்ளலாம். கோயிலுக்குத் தீ வைப்போர், சுவர்களை உடைப்போர் முதலியவர்கள் இவ்வகையில் அடங்குவர். மதப்பற்று காரணமாக படங்காச்சாரம் என்ற போர்வையில் பல்வேறு பாதிப்புகள் கோயில்களுக்கும் கோயில் அரும்பொருள்களுக்கும் ஏற்படுகின்றன.

# பாதுகாப்பு முறைகள்

'பாதுகாப்பு' என்பது ஒரு பொருளின் ஆயுளை அதிகரித்தல் எனப்படும் எதிர்மறையான அல்லது நேரடிச் செயல் ஆகும். பாதுகாப்பு முறைகளை மூவகைப்படுத்தலாம். அவை :

★ தடுப்புப் பாதுகாப்பு

★ குறுக்கீட்டுப் பாதுகாப்பு

★ சீரமைப்பு

# தடுப்புப் பாதுகாப்பு

உடைந்த அல்லது உடையாத ஒரு பண்பாட்டுச் செல்வத்தின் வயதைக் கூட்டிடச் செயல்படுத்தப்படும் அனைத்து எதிர்மறையான செயல்களும் தடுப்புப் பாதுகாப்பு ஆகும். இம்முறையினால் எவ்வித நேரடித் தொடர்பின்றி பொருட்கள் பாதுகாக்கப்படுகின்றன. ஒரு பொருளின் பாதிப்பு அதன் சுற்றுச் சூழலை பொருத்ததாகும். ஒரு பொருள் உருவாக்கப்படும்போது அப்பொருளின் பௌதிகக் கட்டுக்கோப்பு 100 விழுக்காடு ஆகும். நாட்கள் செல்லச் செல்ல அப்பொருளின் கட்டுக்கோப்பு குறைகிறது. ஒரு பொருள் முழுதும் அழிய எடுத்துக் கொள்ளும் காலத்தை ஒரு பொருளின் எதிர்பார்ப்பு ஆயுள் என்று சொல்லலாம். உதாரணமாக ஒரு இரும்புப் பொருளின் கட்டுக்கோப்பு, அதனை உருவாக்கும்போது 100 விழுக்காடு இருக்கும். அது முற்றிலுமாக துரு பிடிக்கும்போது அது தன் ஆயுளை இழக்கிறது. எனினும் அப்பொருளின் உருவம் மாறுவதில்லை. சிதையும் தன்மை இருந்தாலும் கூடப்பொருளின் ஆயுள் காலம் இன்னும் வெகுவாக அதிகரிக்கிறது. அரும்பொருட்கள் பல்வேறு காரணங்களால் சிதைகின்றன. அழிவினை இருவகைப்படுத்தலாம். அவை, உடனடி அழிவு, முன்னேற்ற அழிவு எனப்படும்.

### உடனடி அழிவு

இயற்கையின் சீற்றத்தாலும் மனிதனுடைய செயல்களாலும் பொருட்கள் பாதிக்கப்படுகின்றன. இயற்கையால் உண்டாகும் அழிவை உடனடி அழிவென்றும், கால ஓட்டத்தில் சிறுகச் சிறுக ஏற்படும் அழிவுகளை முன்னேற்ற அழிவு என்று அழைக்கிறோம். வெள்ளம், தீ, பூமி அதிர்ச்சி, எரிமலை வெடித்தல் போன்றவற்றால் உடனடியாக அரும்பொருட்கள் அழிகின்றன.

## முன்னேற்ற அழிவு

இந்த வகைப் பாதிப்பு இயற்கையான பாதிப்பாகும். இது சுற்றுச் சூழல் மாசுறுவதால் காற்று, தூசு, ஈரம், வெப்பம், வெளிச்சம், உப்பு, நுண்ணுயிரிகள் போன்றவற்றால் உருவாகின்றன.

மனிதனால் ஏற்படுத்தப்படும் குறைபாடுகளை இரண்டு வகைப்படுத்தலாம்.

1. பொது மக்களால் ஏற்படும் குறைபாடுகள்

2. பாதுகாக்க வேண்டியவர்களே ஏற்படுத்தும் குறைபாடுகள்.

## 1. பொது மக்களால் ஏற்படும் குறைபாடுகள்

மக்களின் புரிந்து கொள்ளாமையே பொதுவாகக் கோயில் பொருட்களின் எதிரியாக அமைகின்றது. இதனை மனிதனின் பல்வேறு செயல்களால் விளங்க வைக்கலாம். வேண்டுமென்றே பொருட்களை அழித்தல், பாதுகாக்கப்பட்ட இடத்தை ஆக்கிரமித்தல், ஓரிடத்தைச் சுற்றுலா மையமாக்குதல், திருடு, சண்டை, பயங்கரவாதம், காடுகளை அழித்து நகர்ப் புறமாக்குதல் போன்றவற்றால் கோயில்களும் கோயில் பொருட்களும் அழிவை நோக்கி நடைபோடுகின்றன. எந்த பொருட்கள் மக்களை ஈர்க்கின்றனவோ அவைகளை மக்களே அழிக்கின்றனர். இவ்விதமாக பல்வேறு மனிதச் சூழ்நிலை மாற்றங்களால், மதவாதங்களால், கோயில்களும், பொருட்களும் அழிக்கப்பட்டு வருவதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம்.

## கலைப்பொருட்களை அழித்தல்

பொதுவாக கூட்டமாகச் செல்லும்போது மற்றவர்கள் தம்மை மெச்சிக் கொள்ள வேண்டும் என்பதற்காகவோ, அல்லது கூட்டமாக இருப்பதாலோ அறிந்தோ அறியாமலோ கலைப்பொருட்களை அழிக்கும் நிலை அதிகரித்து வருகின்றது. இந்நிலை எல்லா நாடுகளிலும் உண்டு. பொதுவாக கோயில்களில் மக்கள் போக்குவரத்து அதிகமாக இல்லாதிருந்தால் அவை விசமிகள் தங்கும் இடமாக மாறிவிடுகின்றன. சாராயம் காய்ச்சும் இடமாகவும், குடிக்கும் இடமாகவும், தூங்கும் இடமாகவும், சூதாடுமிடமாகவும் மாறுகின்றன. இதனால் கோயில்கள் உடைந்து சிதறுகின்றன. ஆந்திர மாநிலத்திலுள்ள அமராவதியில் இருந்த புத்த விகாரம் கவனிப்பாரற்றுப் போகவே நாளடைவில் மக்கள் சிற்பங்களைச் சிற்பங்கள் என்றே அறியாமல், உணர்வில்லாமல் அவற்றை வீடு கட்டுவதற்காக வேகவைத்து, சுண்ணாம்பாக ஆக்கினவர்களும் உண்டு. சில கற்களை வீடுகள் கட்டப் பயன்படுத்தியவர்களும் உண்டு. பெரும்பாலானவை இன்று பிரிட்டிசு அருங்காட்சியகத்தில் உள்ளன. சில சென்னை அருங்காட்சியகத்தில் உள்ளன. இன்றும் கூட, பழங்கால சிதைந்த கோயில்களின்

சில பகுதிகளைப் புதிய கோயில்களில் வைத்து கட்டப்பட்டிருப்பதையும் பார்க்கிறோம். வேலூர் மாவட்டம் ஆற்காட்டில் உள்ள ஆற்காடு நவாபுகள் கட்டிய மசூதியுடன் கூடிய குளத்தின் கரையானது சோழர் கால கோயில்களிலிருந்து பெயர்த்து எடுக்கப்பட்ட கற்பாளங்களால் கட்டப்பட்டு இருப்பதை அவற்றிலுள்ள கல்வெட்டுப் பகுதிகளைக் கொண்டு உறுதியாகக் கூற முடியும்.

முகமது கோரி சோமனாதபுரியிலுள்ள கோயிலைக் கொள்ளை அடித்தது வரலாற்று உண்மை. அயோத்தியில் பாபர் மசூதியை இடித்தது உலகம் அறிந்த உண்மை. எருசலேமில் கிறித்தவத் தேவாலயத்தை அழித்து அவ் விடத்தில் மசூதி கட்டினதும் வரலாற்று உண்மை. வேலூர் ஜலகண்டேசுவரர் கோயிலில் உள்ள கல்யாண மண்டபத்தைப் பெயர்த்துக் கொண்டுபோய் லண்டனில் வைக்க எண்ணி முயற்சித்துத் தோற்றுப்போனதை வரலாறு கூறும். இன்றும் சுற்றுலாச் செல்லும் பயணிகள் கோயிலுக்குச் செல்லும்போது கோயிலின் சுவர் பகுதிகளை ஞாபகார்த்தப் பொருளாக இருக்கும்படி உடைத்து எடுத்தோ அல்லது சிறு பொருட்களை தங்களுடைய பொருள் போல எடுத்துக் கொண்டு போவதையோ நாம் கண்டிருக்கிறோம். கண்ட இடங்களில் கல்வெட்டு பதிப்பதுபோல் தங்களுடைய பெயர்களைத் தீட்டுவதும், சிற்பங்கள் மீது கரி கொண்டு பெயர்களை எழுதுவதும், சிற்பங்கள் மீது மையை தெளிப்பதும், உருவங்களின் சில பகுதிகளைக் கையினால் தேய்த்து அலங்கோலப் படுத்துவதும் நாம் நாள்தோறும் காண்கிற ஒரு காட்சியாகும். இவற்றால் பயன் ஒன்றும் இல்லாதிருந்தாலும் கலைத் தொடர்புடைய பொருட்களை அழிக்கிறோம் என்பது உண்மை; இது அநீதியாகும். சில கிராமங்களில் கோயில் அரும்பொருட்களை, புடைப்புச் சிற்பங்களை, கல்வெட்டுகளை வீட்டு வாசற்படியாகப் பயன்படுத்தியிருப்பதை நானே நேரில் பார்த்திருக்கிறேன். சில துவைக் கற்களாகப் பயன்பட்டதைத் தவிர்த்துள்வேன். அவற்றில் சில ஈரோடு அருங்காட்சியகத்தில் உள்ளன. சில ஊர்களில் சிற்பத்தை முகம் குப்புறப்படுக்க வைத்தும் மழை காலங்களில் அதனை நிமிர்த்தியும் வைக்கின்ற கிராம மக்களும் உண்டு. சிற்பங்களின் மூக்கை உடைப்பாரும், தலையைக் கொட்டி பார்ப்பாரும் உண்டு. இன்றும் மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் தட்டினால் ஒலி கிடைக்கின்றது என்பதால் கட்டையால் ஒரு கற்சிற்பத்தை அடிக்கும் தரிசனத்தை இன்றும் காணலாம். சில கோயில்களில் தேர்வில் தேர்ச்சியுற வேண்டும் என்பதற்காக சுவர்களில் பெயர்களையும் புதிய வகுப்புகளையும் எழுதுவதால் உண்டாகும் சிதைவுகளை உணராமல் நிறைவோடு செல்லும் கூட்டங்களும் உண்டு.

## ஆக்கிரமித்தல்

கோயிலுக்குச் சொந்தமான பகுதிகள் பொதுவாக மக்களால் ஆக்ரமிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. பாதுகாக்கப்பட்ட கோயில்களுக்குப் பக்கத்தில் வீடுகளைக் கட்டுவதால் பல்வேறு முறைகளில் கோயில் கட்டடங்கள் பாதிக்கப்படுகின்றன. கோயிலுக்குள் மாடுகளைக் கட்டுவதும், விறகுகளை அடுக்கி வைப்பதும், சிறு பிள்ளைகள் மட்டைப் பந்து ஆட கோயில் சுவர்களைப் பயன்படுத்துவதும், கோயில்களை ஒட்டி கடைகளை அமைத்து, சுவர்களைப் பல்வேறு முறைகளில் பயன்படுத்துவதும் பொதுவாக நாடுமுழுவதும் காண்கிற செயல். தமிழ்நாடு இதற்கு விலக்கல்ல. குறைந்த நில வாடகைக் கொடுத்து விட்டு கோயிலை ஒட்டியுள்ள நிலங்களில் பெரிய பெரிய வீடுகட்டி அல்லது கடைகள் கட்டி கோயில்களை அழிப்பாரும் உண்டு. கோயில் சுவர்களையே தம் வீட்டுச் சுவராக மாற்றி அதன் உண்மை நிலையை மறைப்பாரும் உண்டு. இப்படி பல்வேறு முறைகளில் கோயில்கள் அழிகின்றன. கோயிலில் உள்ள பொருட்களும் அழிகின்றன.

## சுற்றுலா மையமாக்குதல்

ஒரு இடம் கோயிலின் சிறப்பாலோ அங்குள்ள கலையம்சமுடைய பொருட்களினாலோ பொது மக்களை ஈர்ப்பதால் அந்தக் கோயில் உள்ள நகரத்தில் போக்குவரத்து அதிகரிக்கிறது. மக்கள் போக்குவரத்தைச் சமாளிக்க வாகனங்கள் அதிகரிக்கின்றன. மக்கள் கூட்ட மிகுதியால் தங்கும் விடுதிகள் அதிகரிக்கின்றன. கடைகள் அதிகரிக்கின்றன. இதனால் தூசு, புகை போன்றவை காற்று மண்டலத்தில் அதிகமாகி கோயில்களும் பொருட்களும் பாதிக்கப்படுகின்றன. ஜனக்கூட்ட மிகுதியால் கோயிலையும் அரும்பொருட்களையும் தகுந்த முறையில் கண்காணிக்க இயலாமல் போகிறது. மதுரை, மகாபலிபுரம், ரமேசுவரம், தஞ்சாவூர், நாகப்பட்டனம், வேளாங்கண்ணி போன்ற இடங்களில் உள்ள கோயில்களில் பொது மக்கள் நடமாட்டம் அதிகமாகி கோயில் கட்டடங்களும் அரும்பொருட்களும் பாதிக்கப்படுகின்றன.

## நகர் உருவாகுதல்

பழங்கால கோயில்களைச் சுற்றிலும் நகர்கள் உருவாகும் பொழுது சுற்றிலும் உள்ள காடுகள் சிதைக்கப்படுகின்றன. பெரிய கட்டடங்கள் கட்டப்படும்போது கோயில்களின் அத்திபாரங்கள் தளுங்குகின்றன. வாகனங்கள் போக்குவரத்தினாலும் பழங்காலக் கோயில்களின் அத்திபாரங்கள் அதிர்வுறு வதினால் கட்டடங்கள் சிதைகின்றன. பெரிய விடுதிகள், தொழிற்சாலைகள் போன்றவை கட்டப்படுவதால் கோயிலைச் சுற்றிலும் உள்ள காடுகள்

அழிக்கப்படுவதால் புகை, தூசி போன்றவற்றை தடுக்கக் கூடிய மரங்கள் வெட்டப்படுவதால் கோயில்கள் பாதிக்கப்படுகின்றன.

## திருட்டு

இன்று சட்ட விரோதமாக அரும்பொருட்களை ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுக்குக் கடத்தப்படும் செய்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. வறுமையும் அறியாமையும் இன்றைக்கு பல்வேறு கோயில்களிலுள்ள சிலைகள் திருடப்பட்டு அவை வெளிநாடுகளுக்கு கடத்தப்படுவதைப் பத்திரிக்கைகளில் படிக்கிறோம்; சில வேளைகளில் கண்கூடாகக் காண்கிறோம். கோயில்களிலுள்ள சிற்பங்களின் பகுதிகளை உடைத்து அவற்றை வெளிநாடுகளுக்கு அனுப்பும் செயல் பெருகி வருகிறதை சமீப காலத்தில் இந்து பத்திரிக்கையில் படித்து பேரதிர்ச்சியடைந்தேன். ஈவு இரக்கமில்லாத, கலை உணர்வில்லாத, வெறித் தனமான அரும்பொருட் கொள்ளையரை நினைக்கும் பொழுதெல்லாம் மனம் பதறுகிறது. சமீபத்தில் சென்னை அரசு அருங்காட்சியகத்திற்கு, புலனாய்வுக் காவல் துறையினர் ஏறத்தாழ நூறு சிற்பங்கள், ஓவியங்கள் போன்றவற்றை கலைப்பொருள் திருடர்களிடமிருந்து கைப்பற்றி அருங்காட்சியகத்தில் ஒப்படைத்துள்ளது குறிப்பிடத்தக்கச் செய்தியாகும். காணாமல் போவதோ ஏராளம்; கண்டுபிடிக்கப் படுவதோ மிகக் குறைவு. ஒரு குறிப்பிட்ட சிற்பத்தை அருங்காட்சியகத்தில் வைக்க அனுமதி கோரி அதனைப் பெறச் சென்றபோதுதான் சிலை ஊர் மக்களால் விற்கப்பட்டது தெரிந்தது. இதனால்தான் திருடப்பட்ட பொருட்கள் பல கண்டுபிடிக்கப்பட்டு அருங்காட்சியகத்தில் சரணடைந்துள்ளன.


திருடப்பட்ட
இயேசுவின் மரச் சிற்பம்

பத்தூர் சிவன் கோயிலை ஒட்டி புதைக்கப்பட்டிருந்த நடராசர் சிலை உட்பட 14 வெண்கலச் சிற்பங்கள் ஒரு தோட்டக்காரர் தற்செயலாகக் கண்டு பிடித்து, அவற்றில் நடராசர் சிலை விற்பனையாளர் உதவியுடன் வெளிவந்து சென்னையில் தங்கி, மும்பையில் உலாவி, அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குக் கடல் கடந்து சென்று, இங்கிலாந்து தேசத்தில் பிரிட்டிசு அருங்காட்சியகத்தில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த வேளையில்தான் நடராசர் திருட்டுத்தனமாக லண்டனுக்கு வந்துவிட்டார் என்பது யாவருக்கும் புலனாகியது.

லண்டனில் நடைபெற்ற வழக்கில் நடராசர் சிலையின் அடியிலிருந்த

கரையான் புற்றுதான் அடையாளம் காட்டியது. தடயவியல் வல்லுநர்கள் மற்றும் காவல் துறை அலுவலர்கள் ஆகியோருடைய உதவியுடன் பத்தூர் நடராசர் மிகச் சிரமப்பட்டு தமிழ்நாடு திரும்பியது நமக்கெல்லாம் வெற்றிப் பெருமிதம் அளிக்கிறது. அதுமட்டுமா? தனியாக இருக்கும் கோயில்களில் போதிய பாதுகாப்பு இல்லாமையால் கலைப்பொருள் திருடர்கள் எதைவேண்டுமென்றாலும் எடுத்துச் செல்வார்கள். கோயில்களிலுள்ள கலைப்பொருட்களைப் பாதுகாக்க தனிக் காவல்படை அமைத்து செயல்படுவது தொடர்பாக அரசு பல்வேறு முயற்சிகள் எடுத்து வருகிறது. ஆனால் அரசு என்னதான் முயற்சி செய்தாலும் அவற்றைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் நமக்கு இராவிட்டால் கலைப்பொருட்களைத் திருடு வதிலிருந்து தடுப்பது சிரமம். இதற்காகத்தான் கோயில்களிலுள்ள வெண்கலச் சிற்பங்கள் மற்றும் விலைமதிப்பற்ற தங்க இரத்தின அணிகலன்களைப் பாதுகாக்கும் பொருட்டு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை திருநெல்வேலியிலும், திருவாரூரிலும், சிற்பங்களின் பாதுகாப்பு மையங்கள் அமைத்து, செயல்படுத்தி வருகின்றது. விழாக்காலங்களின்போது அந்தந்த கோயிலுக்குச் சொந்தமான வெண்கலச் சிற்பங்கள் மற்றும் ஆபரணங்களை எடுத்துச் சென்று பயன்படுத்திவிட்டு மறுபடியும் பாதுகாப்பு மையத்தில் கொண்டுவந்து வைக்கப்படுகின்றன.

கோயில்களுக்குச் சொந்தமான தேர்களிலிருந்து சிற்பங்களைக் கழற்றி, விற்று விடுகிற செய்திகளையும் கேள்விபட்டிருக்கிறோம். தேரழுந்தூரில் உள்ள தேரினைப் பாதுகாக்கச் சென்றிருந்தபோது நான் கேட்ட செய்தியைக் கூற விரும்புகிறேன். ஒரு நாள் இரவு தேருக்குப் பக்கத்தில் ஒரு டிராக்டரை நிறுத்திவிட்டு டிராக்டரைப் பழுது பார்ப்பதுபோல இருவர் நடித்துக் கொண்டிருக்கும்போது இருவர் தேரின் சிற்பங்களைக் கழற்றிட முயற்சித்திருக்கிறார்கள். எப்படியோ திருட்டிலிருந்து தேர் தப்பிப் பிழைத்திருக்கிறது. தங்க ஆபரணங்களை எடுத்துவிட்டு, போலியான ஆபரணங்களைக் கோயில் சிற்பங்களின் மேல் அணிந்த சம்பவங்களும் நமக்குத் தெரியும். கோயில்களிலுள்ள வெண்கலச் சிற்பங்களில் தங்கம் இருக்கின்றது என்ற தவறான ஒரு கருத்து மக்களிடையே நிலைத்திருப்பதால் சில சிலைத் திருடர்கள் தங்கத்தின் மேல் மோகம் வைத்து அவற்றைக் கோயில்களிலிருந்து எடுத்து உரசிப் பார்த்து அல்லது வெட்டிப் பார்த்து, தங்கம் இல்லை என்பதைக் கண்டு அவற்றைக் கிணற்றில் அல்லது குளத்தில் வீசி எறிந்துச் செல்வாரும் உண்டு. திருடிக் கொண்டு போகும்போது காவல்துறையினரைக் கண்டு அப்படியே போட்டுவிட்டு போகிறவர்களைப்பற்றியும் அறிந்திருக்கிறோம். வெளிநாட்டிற்கு அனுப்புவதற்காகப் பிறபொருட்களுடன் கலந்து, அனுப்புகையில் கண்டு பிடிக்கப்பட்டு, தண்டனை பெற்றிருப்பாரும் பலர் உண்டு. அநேக வெண்கலச்

சிற்பங்களும், மரச்சிற்பங்களும், கற்சிற்பங்களும் நாடு கடந்து போய் திரும்பி வரமுடியாதபடி தவிக்கிற செய்திகளையும் கேள்விப்படுகிறோம். திருட்டிலிருந்து பாதுகாப்பதற்காகவும் வெண்கலச் சிற்பங்களை வெளிநாட்டிற்குச் செல்வதை தவிர்க்கவும் பல்வேறு வழிமுறைகள் செய்யப்பட்டு வருகின்றன.

## தீ விபத்து

கோயில்களிலுள்ள பல கலைப்பொருட்களும் பண்பாட்டுப் பொருட்களும் பெருவாரியாகத் தீயினால் அழிக்கப்பட்டிருப்பதை அறிய முடிகிறது. விசமிகளால் பல்வேறு தீ பற்றக்கூடிய கலைப்பொருட்கள் மீது தீ வைத்து அழிக்கப்பட்டிருப்பதை நாம் பல நேரங்களில் கேள்விப்பட்டிருக்கிறோம். விழாக்காலங்களில் கோயில்களை ஒட்டி பந்தல் அமைக்கப்படுவதால், பந்தல்களில் தீப்பற்றி கோயில் பகுதிகள் சேதம் அடைந்திருப்பதையும் படித்திருக்கிறோம். 1998–ம் ஆண்டில் தானே தஞ்சாவூர் பெருங்கோயிலில் நடந்த கும்பாபிஷேசத்தில் போடப்பட்டிருந்த பந்தல் தீப் பிடித்து பொருட்கள் பல எரிந்ததையும் மக்கள் பலர் பலியானதையும் நாம் மறந்து விடவில்லை. அவினாசியில் கோயில்தேர் தீப்பிடித்து எறிந்தச் செய்தியை நாம் கேள்விப்பட்டதை மட்டுமல்லாமல் அவற்றிலுள்ள சிற்பங்கள் சிலவற்றைக் கழற்றி சென்றிருப்பதையும் கேள்விப்பட்டிருக்கிறோம். யாகங்கள் நடத்தும் பொழுது பல்வேறு கலைப்பொருட்கள் அழிந்துள்ளன. சிற்பங்கள் கரி படிந்து பாதிக்கப்பட்டுள்ளன. தீ விபத்திலிருந்து கோயில்களும் கோயில் அரும்பொருட் களும் தவிர்க்கப்பட, கோயில் வளாகம் தூய்மையாக இருக்க வேண்டும். தீப்பற்றக் கூடிய பொருட்களைக் கோயிலுக்குள் வைக்காமல் இருப்பது நலம். பொதுவாக வாகனங்கள் மற்றும் தளவாடங்கள் உள்ள பகுதிகளில் மிகக் கவனமாக அவற்றை கண்காணிக்க வேண்டும்.



அவினாசி கோயில்தேர்

## பூமி அதிர்ச்சி மற்றும் அழிபாடுகள்

பூமி அதிர்ச்சியினால் கட்டடங்கள் நொருங்குகின்றன. இடிகள் விழுவதாலும் பெரும் மழையின் காரணமாகவும் கோயில்கள் இடிந்து தரைமட்டமாய் இருப்பதை நாம் காண்கிறோம். இப்படிப்பட்ட அழிவினால் கோயில்பொருட்கள் ஏதும் தப்புவதில்லை. பொதுவாகக் கோயில் கோபுரங்களின்

உச்சியில் இடிதாங்கிகள் வைக்கப்பட்டிருப்பதை நாம் பார்த்திருக்கிறோம். தானியங்கள் நிறைந்த செப்புக் குடங்கள் இடிதாங்கிகளாகப் பயன்படுகின்றன.

**பயங்கரவாதம்**

பயங்கரவாதிகள் கோயில்களைத் தங்களது தங்கும் இடமாக மாற்றிக் கொள்கிறார்கள். அமிர்தசரஸ் பொற்கோயிலில் தீவிரவாதிகள் பதுங்கி இருந்ததையும் காஷ்மீர் கோயில்களில் தீவிரவாதிகள் பதுங்கி இருந்ததையும் இன்னும் இதுபோல பயங்கரவாத செயல்களையும் நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். இதனால் தாக்குதலின் போது கோயில்கள் சேதம் அடைகின்றன; அரும்பொருட்கள் அழிகின்றன. இன்றும் கூட வேலூர் கோட்டைக்குள் உள்ள ஜலக்கண்டேசுவரர் கோயிலின் சுவர்ப்பகுதியில் துப்பாக்கிக் குண்டுகளால் தாக்கப்பட்டு உடைந்த பகுதிகளைக் காணலாம். சென்னையில் வினாயகச் சதுர்த்தியின்போது திருவல்லிக்கேணி பகுதியில் இந்துக்களுக்கும் இஸ்லாமியருக்கும் கலவரங்கள் ஏற்பட்டு கலைப்பொருட்கள் சேதமடைந்ததை பல ஆண்டுகளாக கேள்விப்பட்டிருக்கிறோம். கோயில்கள் மீது அல்லது தேர்கள் மீது சிற்பங்கள் மீது தார் பூசப்பட்டு பொருட்கள் சிதைந்துள்ளதையும் நாம் பார்க்க முடியும்.

ஒரே கோயிலில் இரண்டு குழுக்கள் இருக்கும்போது சண்டை ஏற்படுவதும் உண்டு. இதனால் கோயில் பொருட்களுக்கு சேதம் ஏற்படுவதையும் காண்கிறோம். நாடுகளுக்கிடையில் சண்டை ஏற்படும்பொழுது குண்டு வீச்சினால் பல்வேறு கோயில்கள் அழிந்துள்ளன. ஜெர்மனி நாட்டின் தலைநகராகிய பெர்லின் நகரில் உள்ள கெய்சர் வில்லியம் தேவாலயம் குண்டு வீச்சினால் பாதிக்கப்பட்டு இன்றும் இடிபட்ட நிலையில் நிற்பதை நான் நேரில் கண்டு அதிர்ச்சியுற்றேன்.

## 2. பாதுகாக்க வேண்டியவர்களால் ஏற்படும் குறைபாடுகள்

கோயில்கள் மற்றும் கோயில் அரும்பொருட்களைப் பாதுகாத்திட ஏற்படுத்தப்பட்டுள்ள பொறுப்பாளர்கள் செய்ய வேண்டியதைச் செய்யாமல் போனாலும், செய்யக் கூடாததைச் செய்தாலும் பொருள்கள் அழிகின்றன. பொதுவாகக் கோயில் பொறுப்பாளர்கள் பெரும்பாலோர் கோயில்களை எவ்வாறு பேண வேண்டும் என்ற அறிவில்லாதவர்களாக இருக்கின்றனர். எனவே, அவர்களிடம் கொடுக்கப்பட்ட பொருள்கள் பாதிக்கப்படுகின்றன. உதாரணமாக, கோயிலில் உள்ள கல்வெட்டுக்கள் போன்றவை மீது சுண்ணாம்பு மற்றும் எண்ணெய் வண்ணங்கள் பூசக்கூடாது. ஆனால் ஒரு கோயிலைப் புதுப்பிக்கும்போது யாவரும் விரும்புவது ஒட்டு மொத்தமான புதுப்பித்தலாகும்.

இம்முறையினால் கல்வெட்டுகள் மறைகின்றன. சுவரின் உடைந்த பகுதிகள் புதுப்பிக்கப்படும் பொழுது சாதாரணமாக எவ்வித பொருள்களினால் சுவர் எழுப்பப்பட்டிருக்கிற தென்று அறியாமல் சிமெண்டுச் சாந்தைக் கொண்டுச் செப்பனிட்டு விடுகிறார்கள். இதனால் காரைச் சாந்துச் சுவர்கள் அதிகம் உடைந்து, சிதறுகின்றன. இன்றும் காஞ்சிபுரம் வரதராசப் பெருமாள் கோயிலில் சில இடங்களில் சிமெண்டு பூசப்பட்டுள்ளதைக் காணமுடியும். இது தொடக்கத்தில் பாதுகாப்பு முறை தெரியாதவர்கள் செய்த சீரமைப்பாகும். கடலூர், பாடலீசுவரர் கோயிலில் வேதியியத் தூய்மைப் பணியாற்றிய போது (1997) பட்டக்காரர்கள் பலர் இப்பணியில் பயன்படுத்தப்பட்டனர். கதவுகளில் உள்ள வெங்கலப்பூண்கள், வெங்கலப்படிகள் போன்றவற்றைத் தூய்மைப்படுத்தியபோது மிகச்சீக்கிரத்தில் பளிச்சிட கந்தக அமிலம் பயன்படுத்த வேண்டுமென்று துடித்தனர். நான் அவர்களை அனுமதிக்கவில்லை. மிக வீரியமற்ற சோடியம் பொட்டாசியம் டார்ட்ரேட் என்ற வேதியியப் பொருள் காரத்துடன் பயன்படுத்தப்பட்டது. அவர்கள் வெறுப்படைந்தாலும் பொருட்கள் பாதிக்கப்பட நான் அனுமதிக்கவில்லை. பணி மெதுவாகவே நடைபெற்று முடிந்தது.

சில கோயில்களில் கற்சுவர்கள் மீது நெடுங்காலம் பூசிய சுண்ணாம்பை அகற்ற மணல் வீச்சைப் பயன்படுத்துகின்றனர். இம்முறையில் சுண்ணாம்பு அகற்றப்பட்டாலும், கல் சிதறி அழிகின்றது. இப்படி, கற்கோயில்கள் பாதுகாக்கின்ற நபர்களாலேயே அழிகின்றன. பார்க்க அழகாக இருக்க வேண்டுமென்பதற்காக, சிறிது உடைந்த பகுதிகளை அகற்றி, புதிய சாந்து பூசுவதால் பழைமை அழிகின்றது. வேதியியப் பாதுகாப்புக்கு உட்படுத்தப்படும் போது எவ்விதமாக அக்காலக் கட்டடங்கள் கட்டப்பட்டன; என்னென்ன கட்டடப் பொருட்கள் பயன்படுத்தப்பட்டன என்ற ஆய்வு மேற்கொள்ளாமல் சீரமைப்புப் பணிகள் செய்யப்படுவதால் சுவர்ப்பகுதி இன்னும் பலமிழக்கின்றது. கடலூர் பாடலீசுவரர் கோயிலின் காரையால் அமைந்த கூரைப் பகுதியில் சிமெண்ட் கொண்டு சீரமைப்புப் பணி செய்யாமல் சுண்ணாம்புச் சாந்து கொண்டு சீரமைப்புச் செய்தது நிர்வாகிகளின்



**கோயில் செயல் அலுவலர்களுக்கு "பாதுகாப்புப் பயிற்சி".**

பாதுகாப்புச் சிந்தையே. அவர்களுக்கு எனது பாராட்டுக்கள். அவசரம் கருதி தவறான முறைகளைப் பயன்படுத்துவதை அறவே ஒழிக்க வேண்டும். இதனை அகற்றிடும் பொருட்டுத்தான் 1996-இல் சென்னை அரசு அருங்காட்சியகத்தில் ஒரு வார காலத்திற்கு இந்து சமய அறநிலையத்துறையில் பணியாற்றும் மூத்த செயல் அலுவலர்களுக்கு கோயில் அரும்பொருட்கள் பாதுகாப்பு என்ற பயிற்சி நடத்தப்பட்டது. இப்பயிற்சியின் தொடக்க விழாவின்போது மதுரை, நத்தம் ஆகிய இடங்களில் கோயிலில் உள்ள சுவர் ஓவியங்களுக்கு நிகழ்ந்த பாதிப்புக்களை அரசுச் செயலாளருக்குத் தெரிவித்தபோது பாதிக்கும்படியாக நடத்திக்கொண்டிருந்த சீரமைப்புப் பணிகளை உடனடியாக நிறுத்தி வைக்கவும் தகுந்த முறையில் பணிசெய்யவும் அக்கூட்டத்திலே செயலாளர் தெரிவித்தார்; அது பின்பற்றப்பட்டது. எனவேதான் பாதுகாப்புப் பணி மேற்கொள்ளும் பணியாளர்களாலேயே அநேகக் குறைகள் ஏற்படுகின்றன எனத் தெரிவிக்கிறேன். மற்றவர்களால் குறைகள் நிகழுகையில் அதைக்கட்டுப்படுத்த உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளும்போது, நாம் நமது செயல்களைச் சரியான முறையில் செய்ய வேண்டும். முறைகள் தெரியாவிட்டால், தெரிந்தவர்களை அழைத்து ஆலோசனை பெறலாம். சரியான முறையில் பயிற்சி வழங்கப்பட்டதால்தான் கோயில் செயல் அலுவலர்கள் கோயில்களுக்கு பயிற்சியின் பொருட்டு அழைத்துச் செல்லப்பட்டபோது அவரவர் கோயில் பணியாளர்களுக்கு அவர்கள் முன்னெச்சரிக்கைக் கொடுத்து கோயில்கள் மேல் வளர்ந்துள்ள செடிகளையும் மரங்களையும் அகற்றியிருந் தமைக் கண்டு நான் மார்தட்டிக் கொண்டேன். குறிப்பாக மின் விளக்குகளைப் பொருத்தும்போது எதைக் குறித்தும் கவலைப்படாமல் சுவர்ப்பகுதியைச் சிதைத்து, ஓவியப்பகுதியின் வழியாக மின் இணைப்புக் கம்பிகளைச் செலுத்துவதை நான் பல கோயில்களில் கவனித்திருக்கிறேன். இது அறவே தவிர்க்கப்பட வேண்டும். இவற்றை எல்லாம் பாதுகாக்க வேண்டிய பொருப்பாளர்களே கவனிக்க வேண்டும்.


மின் இணைப்பால் பாதிக்கப்பட்ட சுவரோவியம் (நத்தம்)

# தடுப்புப் பாதுகாப்பு செயல்பாட்டுக் கோட்பாடுகள்

கோயில் கட்டடங்களையும், கோயில் அரும்பொருட்களையும் முன்னெச்சரிக்கையுடன் பாதுகாக்க சில செயல்பாட்டுக் கோட்பாடுகளைப் பின்பற்றலாம். அவை பின்வருமாறு:

### *உங்களது பொருட்களை அறிந்து கொள்க.

கோயில் கட்டடங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கும் பொருட்களின் தன்மை, கோயில் அரும்பொருட்களின் தன்மை, நிலை ஆகியவற்றை பாதுகாக்கின்ற பொருப்பாளர்கள் அறிந்து கொள்ள வேண்டும். பொருட்களின் தன்மைகளை அறிந்து கொண்டால் அவற்றைப் பாதிக்கும் கூறுகள் தெரியும். இதனால் அவற்றை எவ்வாறு பாதுகாக்கலாம் என்பதை நன்கு அறிந்து கொள்ளலாம்.

### * பொருட்களின் எதிரிகளைத் தெரிந்து, வகைப்படுத்துக

கோயில் கட்டடம், மற்றும் அரும்பொருட்களுக்கு என்னென்ன பாதிப்புக்கள் உருவாகும் என்பதை அறிந்தால் மட்டுமே நாம் பாதுகாக்க வேண்டியவற்றை எதிரிகளிடமிருந்து தகுந்த முறையில் பாதுகாக்கலாம். கோயில்களில் பக்தர்களே அறியாமையால் எதிரிகளாக இருக்கலாம். அவர்கள் படைக்கும் பொருட்கள் எதிரிகளாக அமையும். குறிப்பாக கடலூர் பாடலீசுவரர் கோயிலில் பராமரிப்புப் பணிகளை மேற்கொண்டபோது பக்தர்களுக்கு வழங்கிய பல்வேறு ஆலோசனைகளை இங்கு நான் நினைவு கூறுகிறேன். எண்ணெய் ஊற்றிவிட்டு தங்கள் கரங்களில் படிந்த எண்ணெயைச் சுவரில் தேய்க்க வேண்டாம். சிற்பங்களுக்கு வெண்ணெய் படைக்க வேண்டாம். குற்றாலம் சித்ரசபாவை ஆய்வு செய்தபோது ஓவியங்களுக்கு குங்குமப் பொட்டு, புனுகு பூச வேண்டாம் என்றும் ஸ்ரீ வில்லிபுத்தூர் ஆண்டாள் கோயில் ஆய்வு செய்யப்பட்டபோது கல்தூண்களுக்கு வர்ணம் பூச வேண்டாம் எனக் கேட்கப்பட்டது. கோயிலில் சிற்பங்களுக்கு உப்பு வழங்க வேண்டாம் எனவும் கேட்கப்பட்டது.

### * எதிரிகளைத் தவிர்க்க

எதிரிகளை இனம் கண்ட உடனே அவற்றைத் தவிர்க்க வேண்டும். உதாரணமாக சுண்ணாம்பைச் சுவரில் பூசுவதற்குப் பதிலாக சுவர்களில் படிந்துள்ள அழுக்குகளை நீக்கும் முறையினைத் தெரிவிக்கலாம். சுவர்களுக்கு

மெருகு செய்யலாம். பல்வேறு முறைகளில் எதிரிகளைத் தவிர்க்கும்போது கோயில் கட்டடங்களும், கோயில் அரும்பொருட்களும் பாதிப்பிலிருந்து விலக்கப் படுகின்றன.

## * எதிரிகளைத் தடுத்து நிறுத்துக

எதிரிகளை இனம் கண்டு அவற்றைத் தவிர்க்க முடியாவிட்டால், அவற்றைத் தடுத்து நிறுத்த வேண்டும். உதாரணமாக கோயில் கட்டடம் ஒழுக்கலால் பாதிக்கப்பட்டிருந்தால் மழைகாலங்களில் ஒழுக்கல் இல்லாவண்ணம் அப்பகுதிக்கு மேலே கூடாரம் அமைக்கலாம். எண்ணெய் விளக்குகள் அமைக்கப்பட்டிருக்கும் பகுதிகளுக்கு மேலே தட்டுகள் அமைத்து கரியை அகற்றலாம். மூலத்தானத்தில் துவாரங்கள் அமைத்து அவற்றில் காற்று வெளியேற்றுச்சாதனம் அமைக்க, அங்கு படியும் கரி குறையும். எண்ணெய்க்குப் பதிலாக கூடம் கொளுத்தினால் கரி படிவதிலிருந்து தடுக்கலாம். திருட்டிலிருந்து பாதுகாக்க விலையுயர்ந்த பொருட்கள் இருக்கும் இடங்களுக்குத் தகுந்த பாதுகாப்பு வைக்க வேண்டும். அறைக்கு இரண்டு அல்லது மூன்று சாவிகள் கொண்ட பூட்டுக்கள் அமைப்பது ஏற்றது.

## * எதிரிகளைக் குறித்து, அளவிடுக

சில எதிரிகளை நாம் கண்டு கொள்ள முடியாது. அவ்வித எதிரிகளைக் குறித்து, அளவிட்டால் அவற்றைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்க முடியும். உதாரணமாக வெப்பத்தை வெப்பமானி கொண்டு அளவிடலாம். ஓவியம் மீது அதிக வெளிச்சம் பட்டால் அதனை அளவிட வெளிச்சமானி உண்டு. தேவையான அளவு வெளிச்சம் இருக்கும்படி நடவடிக்கை எடுக்கலாம். ஈரப்பதம் அதிகரித்தால் பல்வேறு பாதிப்புகள் உருவாகும். இதனை அளவிட ஈரப்பதமானியைப் பயன்படுத்தி, ஈரத்தைக் குறைக்க முயற்சிக்கலாம். அதிகமாக மக்கள் வந்தால் ஓவியங்கள் இருக்கும் இடத்திற்கு கொஞ்சமாக ஆட்களை அனுப்பி அவர்கள் வந்தபின்னர் மற்றவர்களை அனுமதிக்கலாம்.

## * எதிரிகளுக்கு விரோதமாகச் செயல்படுக

எதிரிகள் அதிகம் இருப்பது அறிய வந்தால் அவற்றிற்கு விரோதமாக உடனடியாகச் செயல்பட வேண்டும். ஈரத்தைக் குறைக்க 'ஈரம் நீக்கும் கருவி' வைக்கலாம். வெளிச்சம் அதிகமாக இருந்தால் விளக்குகளை அகற்றலாம் அல்லது குறைக்கலாம். வீடியோ எடுக்கும்போது வெளிச்சக் கருவி இல்லாமல் படம் எடுக்கச் சொல்லலாம். மேலும் வீடியோ எடுக்க அதிகக் கட்டணம் வசூலித்தால் வீடியோ எடுப்பவர்களைத் தவிர்க்கலாம். வெங்கலச் சிற்பங்கள்,

இரத்தினக்கல், தங்க நாணயங்களைத் தகுந்த பாதுகாப்பான இடத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

## *தகுந்த செய்தியைப் பரப்புக

எதிரிகளைத் தடுத்து நிறுத்திட, தகுந்த செய்தி யாவருக்கும் சென்றடைய வகை செய்தல் வேண்டும். உதாரணமாக ஒரு குறிப்பிட்டப் பொருளைப் பயன்படுத்துவதால் ஏற்படும் குறைபாடுகளைச் சொல்லி அதனை நீக்கக் கேட்கலாம். அதற்கு மாறாக, பிற பொருட்களைப் பயன்படுத்த அறிவிப்பு எழுதி வைக்கலாம். பாதுகாப்பு முறைகளை நாடகமாக நடித்துத் தெரிவிக்கலாம். பாதுகாப்பு நெறிமுறை விளக்கக் கையேடுகளை வெளியிட்டு வழங்கலாம்.

# நினைவுச் சின்னங்கள், இடங்கள் மற்றும் அரும்பொருட்கள் தொடர்பான சட்டங்கள்

ஒவ்வொரு நாட்டிலும் பண்பாட்டுப் பொருட்கள் பல்வேறு பிரச்சனைகளைச் சந்திக்கின்றன. சட்ட விரோதமாக வெளியே எடுத்துச் செல்லப்படும் பொருட்களைத் தடுக்கவும், திருடு மற்றும் கலைப்பொருட்களை அழிப்பதிலிருந்து தடுக்கவும் பல்வேறு நாடுகள் சட்டங்களை இயற்றியுள்ளன. இவ்விதமான சட்டங்களை பிரான்சு நாடுதான் முதல் முதலில் 1809–இல் இயற்றியது. அதனைத் தொடர்ந்து பல்வேறு நாடுகள் கலைப்பொருட்கள் தொடர்பான சட்டங்களை இயற்றின.

இந்தியாவில் ஆயிரக்கணக்கான நினைவுச் சின்னங்களைப் பாதுகாக்க இந்திய தொல்பொருள் கழகம் செயல்பட்டு வருகிறது. ஆங்கிலேயர்கள் நினைவுச் சின்னங்களைப் பாதுகாக்க, சிறந்த நடவடிக்கைகள் மேற்கொண்டனர். 18–ஆம் நூற்றாண்டு வரையிலும் கலை மற்றும் பண்பாட்டுப் பொருட்களைப் பாதுகாக்க, சட்டம் ஏதும் வகுக்கப்படவில்லை. லிட்டன்பிரபு இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக இருந்தபோது, 1878இல் இந்திய புதையல் சட்டம் இயற்றப்பட்டது. இந்தச் சட்டப்படி, பூமியினுள் புதைந்த 100 ஆண்டுகளுக்கு முந்திய 10 ரூபாய்க்கு மேற்பட்ட அனைத்து பொருட்களும் அரசுக்குச் சொந்தம். இதன்படி பொருளைக் கண்டுபிடித்தவர்க்கும் நிலச் சொந்தக்காரருக்கும் அரசு அப்பொருளைப் பெற்றுக் கொண்டு 125% இழப்பீட்டுத் தொகையாக வழங்குகிறது. புதையலைக் கண்டுபிடித்தவருக்கு 3/5 பங்கும் நிலச் சொந்தக்காரருக்கு 2/5 பங்கும் இழப்பீட்டுத் தொகை கிடைக்கிறது. புதையலைப் பற்றிய தகவலை மாவட்ட ஆட்சியருக்குத் தெரிவிக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் பொருட்களை விற்கக் கூடாது. பலர் அரசுக்குத் தெரிவிக்காமல் விற்பனை செய்து அகப்பட்டுக் கொண்டு வரவேண்டிய தொகையை இழப்பதோடன்றி தண்டனையும் பெறுகின்றனர்.

1904–ஆம் ஆண்டில் கர்சன் பிரபு இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக இருந்தபோது புராதான நினைவுச் சின்னங்கள் பாதுகாப்புச் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டமானது நினைவுச் சின்னங்களைப் பாதுகாத்து அவற்றை வெளியே செல்லாமல் தடுக்கவும், வரலாறு மற்றும் பண்பாடு தொடர்பான இடங்களில் அகழாமல் இருக்கவும் வழி வகுக்கிறது. இதன் வழி தமிழ்நாட்டில் சிறந்த கோயில்கள் நினைவுச் சின்னங்களாக அறிவிக்கப் பட்டுள்ளன.

கீழ்க்கண்டவை ஒரு சில: தஞ்சைப் பெருங்கோயில், வரதராசப் பெருமாள் கோயில், ஏகாம்பரநாதர் கோயில் (காஞ்சிபுரம்), தூய மேரி ஆலயம், சென்னை, பல்வேறு பள்ளி வாசல்கள் ஆற்காடு.

1947–இல், மார்டிமர் வீலர் இந்திய தொல்பொருள் கழகத்தின் தலைவராக இருந்தபோது அரும்பொருட்கள் (ஏற்றுமதி தடுப்புச்) சட்டம் இயற்றப்பட்டது. இதன்படி எந்த ஒரு அரும்பொருளும் இந்திய தொல்பொருள் கழகத் தலைவரின் இசைவு இல்லாமல் ஏற்றுமதி செய்ய முடியாது. இச்சட்டம் ஒரு பொருள் அரும்பொருளா? இல்லையா என்பதை வகையறுக்கிறது.

1965–இல் இயற்றப்பட்ட பழம்பொருள் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு திருத்தச்சட்டம் 1947–ஆம் ஆண்டுச் சட்டத்தில் உள்ள குறைபாடுகளை நீக்கிட இயற்றப்பட்டது. 1947–ஆம் ஆண்டுச் சட்டத்தில் ஒரு பொருள் பழம்பொருளா, இல்லையா என்பதைத் தொல்பொருள் இயக்குநர் ஜெனரல் முடிவு செய்வார் என்றிருந்தது. ஆனால் 1965–ஆம் ஆண்டுச் சட்டத்தில் ஒரு பொருள் பழம்பொருளா, இல்லையா என்பதைப் பழம்பொருள்கள் மேல்நிலைக்குழு முடிவு செய்யும் என்றுள்ளது.

இச்சட்டத்தின்படி பாதுகாக்கப்பட்ட எல்லைக்குள் அத்துமீறி கட்டடங்கள் கட்டக்கூடாது. பழைய வீடுகளைப் புதுப்பிக்க விரும்பினால் புதுதில்லி இந்திய தொல்பொருள்துறை இயக்குநர் தலைவரிடமிருந்து அனுமதி பெறவேண்டும். பாதுகாக்கப்பட்ட எல்லையிலும் வரலாற்றுச் சிறப்புடைய இடங்களிலும் அனுமதிஇல்லாமல் தோண்டக்கூடாது. பழம்பொருள் தேடி எந்த இடத்திலும் அகழாய்வு நடத்த மைய அரசின் அனுமதி பெறவேண்டும்.

# பாதுகாப்பு முறைகள்

## தீயிலிருந்து பாதுகாப்பு

கோயில்களையும் கோயில் பொருட்களையும் தீயிலிருந்து பாதுகாக்க எரியக்கூடிய பொருட்களை கோயிலுக்குள் கவனக் குறைவாக வைக்கக் கூடாது. கோயிலினுள் திறந்த தீ விளக்குகள் பயன்படுத்தப்படுவதால் எரியக் கூடிய பொருட்களைத் தனியாக வைத்திருக்க வேண்டும். கூடுமானால் இரும்புப் பெட்டிக்குள் வைத்து மூடி வைக்கலாம். ஆடைகள், தேரின் கயிறு, தேர்க்கட்டைகள், ஊர்வலத்தில் செல்லும் வாகனங்கள், தொங்கட்டான்கள், ஆவணங்கள் போன்றவை எளிதில் தீ பற்றக் கூடியவை. எனவே, அவை இருக்கும் இடங்களில் குப்பைக் கூளங்கள் இல்லாமல் தூய்மையாக வைக்க வேண்டும். அடிக்கடி தூய்மை செய்தல் வேண்டும். மின் விளக்குகள் இல்லாத இடமாயின் மெழுகுவர்த்தி போன்ற திறந்த விளக்குகளைப் பயன்படுத்தக் கூடாது. "டார்ச்" விளக்கினைப் பயன்படுத்தலாம். தீயணைக்கும் கருவி பொருத்தப்பட வேண்டும். கோயிலில் பணியாற்றுவோர் யாவருக்கும் தீயணைப்புக் கருவியியைப் பயன்படுத்துவதைக் கற்றுக் கொடுக்க வேண்டும். விழாக் காலங்களில் அமைக்கப்படும் பந்தல்கள் கோயிலை விட்டுத் தூரமாய் அமைக்கப்பட வேண்டும். தீயணைப்புத் துறையின் பரிந்துரையுடன் பந்தல் அமைத்து, தீயணைப்புப் படையினர் உதவியுடன் விழாக்கள் நடத்த வேண்டும். மின் இணைப்புக்கம்பிகளைக் குறைந்த பட்சம் 20 ஆண்டுகளுக்கு ஒரு முறையாவது பழுது நீக்கி புதுப்பிக்க வேண்டும். இதனரல் மின்கோளாறுகள் நீங்கும். பொதுவாக, தேர்த்திருவிழா முடிந்ததும் ஊரின் முக்கியப் பகுதியில் கோயில் பக்கத்தில் தேரினை நிறுத்தி, மூடி வைப்பது வழக்கம். அவ்வப்போது தேரின் பக்கங்களில் குப்பைக் கூளங்கள், இல்லாமல் தூய்மையாக வைக்க வேண்டும். நாகத்தகடு கொண்டு மூடி வைப்பது தீயிலிருந்து வெகுவாகப் பாதுகாக்கும். வாணவேடிக்கைகளின் போது கோயில்களை விட்டு தூரமான இடத்தில் நிகழ்ச்சிகளை நடத்துவதே உகந்தது.

## கட்டடப் பாதுகாப்பு

கட்டடங்கள் கால ஓட்டத்தில் பாதிக்கப்படுவது இயற்கைதான். நாம் செய்யக் கூடியதெல்லாம் கவனமாக இருந்து, உடைந்து விழும் பொருட்களை எண்ணிட்டு, சேமித்து வைப்பதாகும். ஒரு செங்கல்லாக இருக்கலாம்; ஒரு கற்பாளமாக இருக்கலாம்; ஒரு தூணின் பகுதியாக இருக்கலாம். எந்தப் பகுதியாக

இருந்தாலும் சரியான முறையில் சேமித்து வைப்பதே சிறந்தது. பின்னர் அவற்றைப் பயன்படுத்திச் சீரமைக்க ஏதுவாகும்.

சிதைந்த பல்வேறு கோயில்கள் புதுப்பிக்கப்பட்டிருப்பது நாம் அறிந்த ஒன்றாகும். வேலூர் ஜலகண்டேசுவரர் கோயில் கல்யாண மண்டபம், காஞ்சிபுரம், கைலாசநாதர் கோயிலின் முன்னர் உள்ள மண்டபம், செய்யாறு வட்டம் நாட்டேரியிலுள்ள சந்திர மௌலீஸ்வரர் கோயில் போன்றவை முழுவதுமாகப் பிரித்து எடுக்கப்பட்டு, எண்ணிடப்பட்டு, சேமித்து வைத்து, அடித்தானத்தை உறுதிப்படுத்திய பின்னர் மறுபடியும் முன்பிருந்தபடியே பழங்காலப் பொருட்கள் கொண்டு கட்டியுள்ளது நாம் கண்கூடாகக் காணும் காட்சியாகும். கோயில்களில் ஒழுக்கலினால் பல்வேறு பொருட்கள் பாதிக்கப்படுகின்றன. எனவே, மேல் தளங்கள் அகற்றப்பட்டு புதிய தளங்கள் அமைக்கப்பட்டு, ஒழுக்கல்கள் நீக்கலாம். இப்பணியைச் செய்யும் முன்னர் அக்காலத்தில் கையாளப்பட்ட பொருட்களையும் முறைகளையும் பின்பற்றுதல் நலம்.



**சீரமைக்கப்பட்ட கைலாச நாதசுவாமி கோயில் பகுதி**
**(காஞ்சிபுரம்)**

# குறுக்கீட்டுப் பாதுகாப்பு

வேதியிய முறையில் பாதுகாக்கும் முறையினை வேதியியப் பாதுகாப்பு என்கிறோம். இம்முறையில் வேதியியப் பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன. இம்முறை முற்காலத்தில் பயன்படுத்தப்பட்ட பாரம்பரிய முறைகளின் விரிவாக்கம் எனலாம். வேதியியப் பொருட்கள் கோயில் பொருட்களின் தன்மைக்கேற்ப பயன்படுத்தப்படுகின்றன. வேதியியப் பொருட்களைப் பயன்படுத்துவது சற்று கடினமானது; எனினும் அவற்றை அறிந்து செயல்படுத்துவது நன்மை பயக்கும்.

## ஓவியங்கள் பாதுகாப்பு

கோயில்களின் சுவர்களில் சுவரோவியங்களைக் காண்கிறோம். பாறை ஓவியம், பலகை ஓவியம், துணி ஓவியம், சுவடி ஓவியம், காகித ஓவியம் போன்ற பல்வேறு ஓவியங்களும் உண்டு.

வரலாற்றுக்கு முற்பட்ட கால ஓவியங்கள் மைய இந்தியாவின் சில பாகங்களிலும் தென்னிந்தியாவிலும் காணக்கிடக்கின்றன. அஜந்தா ஓவியங்கள் ஏறத்தாழ 700 ஆண்டுகளாகத் தீட்டப்பட்டவை.

## பாறை ஓவியங்கள்

பாறை ஓவியங்கள் என்பவை மனிதன் வாழ்ந்த குகைகளில் தீட்டப்பட்டவை. இவை பெரும்பாலும், இயற்கையாகக் கிடைத்த பொருட்களைக் கொண்டே தீட்டப்பட்டவை. கோயில்களில் இவை காணப்படவில்லை.

## சுவரோவியங்கள்

சுவரோவியங்கள் தமிழ்நாட்டில் சமணக் கோயில்கள், சைவ மற்றும் வைணவக் கோயில்கள், கிறித்தவத் தேவாலயங்களில் காணப்படுகின்றன. இவற்றில் இருவகை உண்டு. ஒன்று சுவர் மீது சுண்ணாம்புக் காரைபூசி, மெருதுவான சுண்ணாம்புக் கூழ் பூசி, ஈரமாக இருக்கும்போதே இயற்கையான வர்ணங்களைத் தீட்டுவதாகும். இது பல்லாண்டுகள் நிலைத்திருக்கக் கூடியது. இன்னொரு முறை காய்ந்த சுவரின் மீது பிசின் கலந்த வர்ணத்தைத் தீட்டுவது. இம்முறையில் வர்ணம் சுவரினுள் அதிகம் ஈர்க்க முடியாது. எனவே எளிதில் பாதிக்கப்படுகின்றன. பல்வேறு கோயில்களில் சுவரின் பகுதிகள் பாதிக்கப்படாமல் இருந்தும் ஓவியங்கள் சிதைந்து இருப்பதைக் காணலாம். இவை இம்முறையில் உருவாக்கப்பட்டதாகும். தமிழகத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட கோயில்களில் சுவரோவியங்களைக் காணலாம். நானே பல்வேறு கோயில்களுக்கு நேரில் சென்று

ஓவியங்களை ஆய்வு செய்துள்ளேன்.

சுவர் ஓவியங்களின் பகுதிகளை அறிந்தால் ஓரளவு அவற்றை அழிவிலிருந்து பாதுகாக்கலாம். தாங்கி, தளம், வர்ணம் மற்றும் மேல்பூச்சு ஒரு ஓவியத்தின் நான்கு பகுதிகளாகும். ஓவியத்தைத் தாங்குவது தாங்கி (சுவர்). ஓவியத்தை சுவரின் மீது அப்படியே தீட்ட முடியாது. அதன் மீது சாந்து பூச வேண்டும். சுவர் ஓவியம் தீட்டக்கூடிய அளவில் மெருதுவாக இருக்க வேண்டும். இதனை தளம் என்கிறோம். ஈரமாக இருக்கும் போதோ, காய்ந்த பின்னரோ ஓவியம் தீட்டப்படலாம். இது வர்ணப் பகுதியாகும். வர்ணம் தீட்டிய பின்னர் காற்று, ஈரம், தூசு, வேதியியப் பொருட்கள் போன்றவற்றிலிருந்து பாதுகாக்கப்பட ஓவியத்தின் மீது பாதுகாப்பு பூச்சு பூசுவது வழக்கம். அதனை மேல்பூச்சு ("பிசின்", "வார்னிஷ்") என்று கூறலாம்.

## பாதிப்புகள்

நீர்க்கசிவினால் ஓவியங்கள் சிதைகின்றன. கட்டடப் பாதிப்பினால் ஓவியங்கள் சிதைகின்றன. ஒட்டடை அடிக்கும்போது சிதைகின்றன. மின்விளக்குகள் அமைக்கும்போது சிதைகின்றன. கட்டடம் பழுது நீக்கும்போது சிதைகின்றன. எனவே மேற்கண்ட பணிகள் நடைபெறும் பொழுது பொறுப்பாளர்கள் மிகக் கவனமாகக் கண்காணிக்க வேண்டும். ஓவியப்பகுதிகளை உரியமுறையில் மூடியபின் பழுதுகள் பார்க்கலாம். கூடுமானால் பாதுகாப்பு முறைகள் தெரிந்த வல்லுநரை அணுகி விவரம் அறிவது நலம். குற்றாலம் 'சித்திர சபை' ஓவியங்களைப் பாதுகாக்கும் பொருட்டு நானே நேரில் சென்று ஆய்வு செய்து ஆய்வறிக்கை வழங்கியுள்ளேன்.

## துணி ஓவியங்கள்

துணி ஓவியம் என்றதும் நமக்கு நினைவுக்கு வருவது 'கலம்காரி' எனப்படும் ஓவியம். இது பருத்தித் துணியில் பேனா கொண்டு தீட்டப்படும் ஓவியமாகும். இவற்றில் பல்வேறு புராணக் காட்சிகள் இடம்பெற்றுள்ள இவை விரிப்புகளாகவும், தொங்கு திரைகளாகவும், தேர் அலங்கரிப்புத் துணிகளாகவும் பயன்படுகின்றன.

துணி பூச்சிகளால் மிகவும் பாதிக்கப்படுகிறது. ஈரமான சூழலில் இருந்தால் கால ஓட்டத்தில் செம்பழுப்பு நிறமடைந்து துணி உடைகின்றது. இதனைத் தடுக்கச் சரியான முறையினைக் கையாள வேண்டும்.

"பாரா டைகுளோ பென்சின்" மற்றும் "தைமால்" போன்ற வேதியியப் பொருட்களை துணிகள் உள்ள பூட்டப்பட்ட அறைகளில் வைத்தால் பூச்சிகள்

ஓடுகின்றன. "அமோனியா" வாயுவைத் துணிகள் உள்ள பூட்டிய அறையில் வைத்தால் துணிகளின் அமிலத்தன்மை நீங்குகின்றது. இம்முறையை ஆறு மாதத்திற்கு ஒரு முறை கையாண்டால் பல்லாண்டுகள் துணி ஓவியங்களும் துணிப் பொருட்களும் பாதுகாப்பாக இருக்கும். இவ்விதத் துணிப் பொருட்களை நீரினால் துவைக்காமல் கவனமாக "உலர் சலவை" செய்வது சிறந்தது. நவீன காலத்தில் "குளிர வைத்தல்" என்ற முறையில் - 20° சென்டிகிரேடு வெப்ப நிலையில் குளிரப் பண்ணினால் பூச்சிகள் அழிக்கப்பட்டு, பொருட்கள் பாதுகாக்கப்படுகின்றன.

## எண்ணெய் வண்ண ஓவியங்கள்

சமீப காலத்தில் எண்ணெய் வண்ண ஓவியங்கள் பல தீட்டப்பட்டுள்ளன. சில ஓவியங்கள் துணியின் மீது எண்ணெய் வண்ணத்தைக் கொண்டும் தீட்டப்பட்டுள்ளன. அநேக கிறித்தவத் தேவாலயங்களிலும், இந்து சமயக் கோயில்களிலும் இவற்றைக் காணலாம்.

இவ்வித ஓவியங்களின் தாங்கி துணியாகும். தளம் துத்தநாக ஆக்ஸைடு பசைபூசப்பட்ட மெருகுவானதாகும். வண்ணங்கள் பிசின் கலந்த வேதியியப் பொருட்களாகும். மரப்பிசின் கரைக்கப்பட்ட வேதியியத் திரவங்கள் (ஆல்கஹால்) மேற்பூச்சாகப் பயன்படுகின்றன.

பொதுவாக, இவ்வித ஓவியங்கள் நீரினாலும், தூசுவினாலும், பூச்சிகளினாலும், தவறாகக் கையாளுவதாலும் பாதிக்கப்படுகின்றன. முன்புறம் கண்ணாடி அமைத்து, பின்புறம் ஈரமும், தூசும் படாதவாறு தடுப்பு அட்டை அமைப்பது உகந்தது. ஓவியத்தைச் சுவர்ப்பகுதியில் வைக்கும்போது ஈரத்தடுப்புப் பொருட்களை (பிளாஸ்டிக்) வைத்து, பின்னர் ஓவியத்தை வைப்பது ஏற்றதாகும். பாதிப்புகள் ஏற்பட்டால் வல்லுநரை அணுகுவது ஏற்றது.

## தஞ்சாவூர் ஓவியம்

தஞ்சாவூர் ஓவியங்களை பல்வேறு கோயில்களில் நான் பார்த்திருக்கிறேன். இதனைப் பலகைப்படம் என்பர். இவ்வோவியத் தாங்கி பொதுவாக பலாமரம் அல்லது தேக்கு மரப்பலகையாகும். இந்நாட்களில் "பிளைவுட்"டில் கூடச் செய்கிறார்கள். இது சீக்கிரம் கெட்டு விடும். அளவிற்கேற்ப ஒன்று, இரண்டு அல்லது பல்வேறு இணைப்புப் பலகைகளால் செய்யப்பட்டிருக்கும். அதன் மீது துணியினைப் புளியங்கொட்டைப் பசை கொண்டு ஒட்டுவர். அதன் மீது சுண்ணாம்புக்கல்லை அரைத்து, பசையாக்கி மேலே பூசுவர். அணிகலன்கள் அமைக்க வேண்டிய பகுதிகளை தேவைக்கேற்ப மேடுபள்ளமாக அமைத்து,

ஓவியம் தீட்டி, மேலே வர்ணம் தீட்டுவர். அதனைத் தொடர்ந்து தங்க ரேக்குகள் ஓட்டுவர்; மணிகள் அமைப்பர். வர்ணம் தீட்டிய பின்னர் மேற்பூச்சு பூசுவர். பொதுவாக கண்ணாடி முன்புறம் அமைத்தும் பின்புறம் துணி ஒட்டியும் பாதுகாப்பர்.

இவ்வகை ஓவியங்கள் பூச்சிகளினால் பாதிக்கப்பட்டிருக்கும்; புகை படிந்திருக்கும்; பலகைகள் சிதைந்திருக்கும். இவற்றைப் பாதுகாக்க வல்லுநரை அணுகுவதே ஏற்றது. இவ்விதமான பல ஓவியங்களை நானே நேரில் கண்டு ஆய்வு செய்து பல்வேறு ஓவியங்களைப் பாதுகாக்க ஆலோசனை வழங்கியுள்ளேன். ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயிலில் இவ்வித ஓவியங்கள் என்னால் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

## கண்ணாடி ஓவியங்கள்

கண்ணாடியில் வரையப்பட்ட ஓவியங்களையும் நாம் கோயில்களில் காணலாம். கண்ணாடி ஓவியத்தில் தாங்கியும் தளமும் கண்ணாடியே. முன்புற கண்ணாடிப் பாதுகாப்புத் தேவையில்லை. ஆனால் பின்புறம் பாதுகாப்புத் தேவை. கண்ணாடிகளில் பின்புறமிருந்து ஓவியம் தீட்டுவர். நான் திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் வட்டத்திலுள்ள கோவூர் என்ற ஊரில் உள்ள பெருமாள் கோயிலில் உள்ள கல்வெட்டுக்களைப் பார்வையிட சென்றிருந்தபோது உடைந்து, சிதறிக்கிடந்த ஒரு கண்ணாடி ஓவியத்தை என் கண்கள் கண்டன. அது துணியில் கட்டி வைக்கப்பட்டிருந்தது. நிர்வாகிகளை அணுகி வேலூர் அருங்காட்சியகத்திற்கு அதனைத்தாருங்கள்; நான் செப்பனிட்டு மக்களின் பார்வைக்காக வைப்பேன்; உங்களுக்கு புதிய ஓவியம் செய்து தருவேன் என்றதும் அவர்கள் எழுத்து மூலம் எழுதிக் கொடுத்தனர். அதனை சென்னை அருங்காட்சியக வேதியியப் பாதுகாப்பு ஆய்வகத்தில் பாதுகாத்து, நகல் ஒன்று எடுத்து நகலினை அக்கோயில் நிர்வாகிகளுக்குக் கொடுத்துவிட்டு பாதுகாக்கப்பட்ட ஓவியத்தை வேலூர் அருங்காட்சியகத்தில் காட்சியில் வைத்தேன். இன்றும் கூட அதனைக் காணலாம். கண்ணாடி ஓவியத்தினை மிகக் கவனமாகக் கையாள வேண்டும். உடைந்து போனால் எறிய வேண்டாம். வல்லுநர்களை அணுகினால் அவை உயிர் பெறும். அல்லது அதனை அருங்காட்சியகத்திற்குக் கொடுக்கலாமே.

## ஓலைச்சுவடி ஓவியங்கள்

பல்வேறு புராணக் காட்சிகள் ஓலைச்சுவடிகளில் ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன. ஓலைச்சுவடிகள் தாங்கியாகவும் தளமாகவும் செயல் படுகின்றன. பூச்சிகளால் அழிக்கப்படும்போதும் ஓலைகள் உடையும்போதும் ஓவியங்கள் அழிகின்றன. பூஞ்சக் காளான்களால் மற்றும் வண்டுகளால் வெகுவாகப் பாதிக்கப்படுகின்றன. ஓலைச்சுவடிகளும் இவ்வண்ணமாகவே பாதிக்கப்படுகின்றன.

வெப்பத்தால் ஓலைச்சுவடிகள் வளைந்து விடுகின்றன. இருபுறமும் கட்டக்கூடிய கட்டைகள் இல்லாமல் இருந்தாலும் உடைகின்றன. எனவே, ஓலைச்சுவடிகளைக் கவனமாக வைத்திருத்தல் வேண்டும். "பாராடைக் குளோரோ பென்சீன்" அல்லது "தைமால்" என்ற வேதியியப் பொருட்களின் உதவியால் பூச்சிகளைத் துரத்தலாம்.



பூச்சிகள் அரித்த ஓலைச்சுவடி

தஞ்சாவூர் சரசுவதி மஹால் நூலகத்தில் ஏறத்தாழ 150 ஆண்டுகளாக பல்வேறு தாவரப் பகுதிகளைச் சேர்த்து அரைத்துப் பொடியாக்கி பொட்டலமாகக் கட்டி ஓலைச்சுவடிக்கட்டுகளுடன் சிறிய பைகளில் வைத்து கட்டிப் பாதுகாக்கிறார்கள். கருஞ்சீரகம், கிராம்பு, அதிமதுரம், கற்பூரம் ஆகியவை இதில் அடங்கும்.

வெப்பத்தால் சேதமடைந்த ஓலைச்சுவடிகளை சிட்ரோனில்லா எண்ணெயில் கரித்துகள் கலந்து சுவடிகள் மீது பூசுகிறார்கள். கரி பூசுவதால் எழுத்துக்கள் தெளிவாகத் தெரியும். இதனால் எண்ணெய் ஓலைச்சுவடிகளால் உறிஞ்சப்பட்டு மென்மையாகிறது. ஓவியங்கள் இருந்தால் பின்புறம் எண்ணெய் பூசலாம். சற்று உலர்ந்த பின்னர் கட்டி வைத்தால் பாதுகாப்பாக இருக்கும். உடைந்துபோன ஓலைச்சுவடிகளைப் பாதுகாக்க வல்லுநரை அணுகுவது ஏற்புடையதாகும்.

## புகைப்படங்கள்

சமீப காலங்களில் புகைப்படங்கள் கண்ணாடியும் சட்டமும் பொருத்தி கோயில்களில் தொங்க விடப்பட்டுள்ளன. புகைப்படங்கள் பூச்சிகளினாலும், பூஞ்சக்

காளான்களாலும் வெகுவாகப் பாதிக்கப்படுகின்றன. இவை வெகுவாகப் பாதிக்கப்படுவதிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டும். புகைப்படங்களின் நகல் எடுத்து வைத்துக் கொள்ளலாம். "நெகட்டிவ்"களை பத்திரப்படுத்தி எண்ணிட்டு வைத்துக் கொள்ளலாம்.

புகைப்படம் என்பது வெள்ளி புரோமைடு பசை பூசிய புகைப்பட அட்டையில் ஒளிபடுவதால் வேதியிய மாற்றமடைந்து ஏற்படும் ஒளிப்படமாகும். "ஜெலட்டின்" என்ற பசையைப் பூச்சிகள் விரும்பிச் சாப்பிடுவதால் பூச்சி வராமல் காத்துக் கொள்ள வேண்டும். பொதுவாக அமிலத்தன்மையற்ற உறைகளில் வைத்துப் பாதுகாப்பது ஏற்றது.

## ஆவணங்கள்

ஆவணங்கள் என்ற வரிசையில் ஓலைச்சுவடிகள், பத்திரங்கள், கணக்குகள், தல புராணங்கள், வெளியீடுகள் போன்றவை அடங்கும். பொதுவாக இவை கரிமப் பொருட்களாக இருக்கின்றன; மிக எளிதில் அழியக் கூடியவை. இவற்றைக் கவனமாகக் கண்காணித்தல் வேண்டும்.

## ஓலைச் சுவடிகள்

ஓலைச்சுவடிகள் தமிழகக் கோயில்களில் தலபுராணங்களாகப் பாதுகாக்கப்பட்டுள்ளன. ஏராளமானவை அழிந்து பட்டன. இன்னும் சில கோயில்களில் உள்ளன. ஓலைச்சுவடிகளைப் பாதுகாக்க பாரம்பரிய முறைகள் கையாளப்பட்டு வருகின்றன. தஞ்சாவூர் மகாராஜா சரபோஜி சரஸ்வதி மகால் நூலகத்தில் நூறு ஆண்டுகளுக்கு மேலாக தாவரங்களின் பகுதிகள் தூளாக்கப்பட்டு ஆவணங்களைப் பாதுகாக்கப் பயன்படுகின்றன.

## காகித ஆவணங்கள்

பல்வேறு கோயில்களில் ஆவணங்கள் காகித ஆவணங்களாகவே உள்ளன. இவை நாளடைவில் காற்றிலுள்ள அமிலத்தன்மையுடைய வாயுக்களாலும் காகிதத்தில் உள்ள வேதியியப் பொருட்களாலும், பூஞ்சக் காளான்களாலும் பாதிக்கப்பட்டு செம்பழுப்பு நிறமடைகின்றன. இதற்குக் காரணம் அமிலத்தன்மையாகும். அமிலத்தன்மையை நீக்காவிட்டால் காகிதங்கள் உடைந்து விடும். எனவே, காகிதங்களை "அமோனியா" வாயு உள்ள ஒரு பெட்டியில் காகிதங்களை ஓரிரு நாட்கள் மூடி வைத்தால் அமிலத்தன்மை நீங்குகின்றன. "அமோனியா" திரவ புட்டியினைத் திறந்து வைத்தால் போதும். இதனால் காகிதம் பலமடையாது; அமிலத்தன்மை நீங்கும். உடைந்த காகிதங்கள் இருந்தால் மெல்லிய காகிதம் கொண்டு மைதாப் பசையினால் ஒட்டி "பாலி

பிராப்பிலின்" உறைக்குள் அடைத்து பாதுகாக்கலாம். "பாராடைக்குளோரோ பென்சீன்" என்ற பூச்சி விரட்டியையும் "தைமால்" என்ற பூஞ்சக்காளான் விரட்டியையும் பயன்படுத்தி பூச்சிகளிடமிருந்து பாதுகாக்கலாம். "செல்லுலோஸ் அசிட்டேட்" காகிதம் கொண்டு பாதுகாக்கப்படும் முறை மிகச் சிறந்தது. ஆவணத்தை இரண்டு மெல்லிய காகிதங்களுக்கும் "செல்லுலோஸ் அசிட்டேட்" காகிதங்களுக்கு, நடுவில் வைத்தும் இரு பக்கங்களிலும் உள்ள மெல்லிய காகிதத்தின் மீது "அசிட்டோன்" திரவம் தேய்த்தால் ஒரே காகிதம்போல் ஆகும். தேவை இல்லாவிட்டால் அசிட்டோன் தேய்த்து காகிதத்தைத் தனியாக்கலாம்.

## மரச்சிற்பங்கள்

மரச்சிற்பங்கள் கதவுகளிலும், மரத்தூண்களிலும், தேர்களிலும் அதிகம் காணப்படுகின்றன. இவை தூசு ஏறி அழகிழந்து காணப்படுகின்றன. ஆண்டு தோறும் வழிபாட்டின்போது எண்ணெய் பூசுவதாலும் தொடர்ந்து தூசு உள்ள சூழ்நிலையில் வைக்கப் பட்டிருப்பதாலும் அழுக்கு கெட்டியாகி விவரங்கள் மறைகின்றன. நான் தேரழுந்தூர், திருச்செந்தூர், ஸ்ரீமுஷ்ணம் போன்ற இடங்களிலுள்ள ஐந்து தேர்களைப் பாதுகாத்திருக்கிறேன். தேர்ச் சிற்பங்கள் பிண்ணாக்கு போன்ற கரும்பொருட்களால் மூடப்பட்டிருக்கும். இதன் மீது தண்ணீர் பீச்சப்பட்டு ஊற வைக்கும்போது மேல்படிந்த அழுக்குகள் நீங்குகின்றன. பின்னர் 5% சோடியம் கார்பனேட் (சலவைச் சோடா) கரைசல் சற்று சூடான நிலையில் பீச்சப்படுகிறது. இதனால் கட்டியான அழுக்கு மெருதுவாகிறது. "புருசு" கொண்டும், துச்சிக் கொண்டும் தேய்க்க அழுக்குகள் நீங்குகின்றன. நீர்கொண்டு 'பீச்சி' அடித்தால் பாளம் பாளமாக அழுக்குகள் நீங்கி சிற்பங்கள் நன்கு பார்க்க முடியும். வர்ணம் தீட்டப்பட்ட சிற்பங்களை இவ்விதமான முறையில் தூய்மை செய்ய இயலாது. வல்லுநரைத்தான் அணுக வேண்டும். ஈரம் காய்ந்த பின்னர் மரப்பாதுகாப்புப் பொருள் (ஆஸ்கு) பூசப்பட வேண்டும்.



**தேரின் சிற்பப் பகுதி பாதுகாக்கு முன்னும் பின்னும்.**

## கற்சிற்பங்கள்


கல்சிற்பத்திலிருந்து உப்பு நீங்க காகிதக் கூழ் ஒட்டுதல்.

பெரும்பாலான கோயில்களில் கற்சிற்பங்கள் பெருமளவில் உள்ளன. அவை மீது எண்ணெய் படிந்து, கருமையடைந்து விவரங்கள் மறைக்கப் படுகின்றன. பாரம் பரியமாக மாக்காப்பு மூலம் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. சில கோயில்களில் சிற்பங்கள் பராமரிப்பு இல்லாமையால் அழிந்து வருகின்றன. எண்ணெய் அழுக்குகளை அகற்ற 5% சலவைச் சோடாக்கரைசல் பூசி, தேய்க்க தூய்மையாகும். "டீப்பால்" என்ற சோப்புக் கரைசலைப் பயன்படுத்துவது நலம். நன்கு தூய்மைப்படுத்திய பின்னர் சிற்பத்துக்குள் புகுந்த உப்புக்களை அகற்றாவிட்டால் சிற்பங்கள் உடையும். எனவே காகிதக் கூழ் பூசி, காய வைத்தால் உள்ளே புகுந்த உப்பு காகிதக் கூழ் வழி வெளியேறும்.

புதிதாக எண்ணெய் பூசப்பட்டிருந்தால் "அசிட்டோன்", எரிசாராயம் தோய்த்து, அவ்வப்போது பஞ்சு கொண்டு அழுக்குகள் அகற்றப்பட வேண்டும். கரிபடிந்திருந்தால் "மார்போலின்" என்ற வேதியியத் திரவம் கொண்டு அகற்றலாம். எப்படியாக இருந்தாலும் எண்ணெய், நெய், வெண்ணெய் பூசாமல் காத்துக் கொண்டால் அழுக்கு படியாது.

## கல்வெட்டுக்கள்


கல்வெட்டுப்படி

சில கோயில்களில் கல்வெட்டுக்கள் பரவலாகக் காணப்படுகின்றன. இவை பராமரிக்கப் படாவிட்டால் அழிந்து விடும். எனவே, கல்வெட்டுக்களைப்படி எடுத்து வைத்தல் வேண்டும். புகைப்படம் எடுத்து வைப்பதும் ஏற்றது. அச்சுக் காகிதத்தை நனைத்து தூய்மை செய்த கல்வெட்டின் மீது வைத்து வளைந்த தேங்காய் நார் புருசு கொண்டு அடித்தால் எழுத்து உள்ள பகுதிக்குள் காகிதம் பதிந்து விடும். அரைவட்டம் போன்ற மை ஒத்தியினால் காகிதப் பரப்பில் அச்சு மை ஒத்தினால் எழுத்துக்கள் மட்டும்

வெண்மையாகப் புலப்படும். இதனையும் புகைப்படம் எடுத்து பாதுகாக்கலாம். இதனால் பல்வேறு வரலாற்று உண்மைகள் புலனாகும். தொல்லியல்துறைக் கல்வெட்டு வல்லுநர்களை அணுகியும் கல்வெட்டுக்களைப் பதிவெடுத்துப் பாதுகாக்கலாம். அவற்றை நூலாக வெளியிடுவதால் செய்திகள் மக்களை அடையும்.

## செப்புத் திருமேனிகள்

தமிழ்நாடு செப்புத் திருமேனிகள் செய்வதில் சிறந்து விழங்கியுள்ளது. வரலாற்றுக்கு முந்திய காலத்திலும், பல்லவர், சோழர், சேரர், பாண்டியர் காலத்திலும் இக்கலை அதிக அளவில் சிறப்புற்றிருந்திருக்கிறது. எனினும் சோழர் இக்கலையில் மிகவும் சிறப்பான நிலை அடைந்திருந்தனர். இன்று சோழர் கால செப்புத் திருமேனிகள் அதிக அளவில் கோயில்களில் காணப்படுகின்றன. இவை, பெரும்பாலும் "மெழுகு இழத்தல்" முறையில் உருவாக்கப்பட்டவை. இவ்விதம் செய்யப்படும் திருமேனிகளைப் 'பஞ்சலோகச் சிற்பங்கள்' என்றும் அழைக்கின்றனர். செம்பு, வெள்ளீயம், துத்தநாகம், அதிக அளவில் உள்ளன. தங்கம், வெள்ளி மிகக் குறைந்த அளவில் (0.1%க்கும் குறைவாக) கலந்திருக்கின்றன. கோயில் விளக்குகள், பாத்திரங்கள் பித்தளையில் செய்யப் பட்டுள்ளன. வெங்கல மணியும் வார்ப்பு முறையில்தான் செய்யப்படுகின்றன. கிறித்தவத் தேவாலயங்களில் விளக்குகள், மணிகள், பீடம் போன்றவை வெங்கலத்தால் செய்யப்பட்டிருப்பதைக் காணலாம். சில இடங்களில் வெங்கலச் சிற்பங்களும் காணப்படுகின்றன. எக்காலத்தைச் சார்ந்தவையாக இருந்தாலும் அவை சுற்றுச் சூழலால் பாதிக்கப்படுகின்றன.

சில கோயில்களில் செப்புப்பட்டயங்கள் உள்ளன. செப்புப் பட்டயங்கள் உப்பு படிந்து, விவரங்கள் மறைக்கப்பட்டிருக்கும். எழுத்துக்களைப் படிக்க செப்புப் பட்டயங்களை மின் வேதியியப் பகுப்பு முறையில் தூய்மை செய்யலாம். ஒருபெரிய கண்ணாடிப் பாத்திரத்தில் 5% சலவைச் சோடா கரைசல் வைத்து அதனுள் இரண்டு இரும்பு வலைகளை நேர் மின்வாயாக வைத்து, செப்புப் பட்டயத்தை எதிர் மின்வாயாக வைத்து (ஒன்றுடன் ஒன்று தொடாமல் இருக்க வேண்டும்) நேர் மின்சாரம் சில மணிநேரம் பாய்ச்சினால் உப்புக்கள் நீங்குகின்றன. வெளியே எடுத்து புருசு கொண்டு தேய்த்தால் தூய்மை அடைகின்றன.

சிற்பங்கள் பச்சை நிறத்துடன் காணப்படுகின்றன. நெடுங்காலமாக காற்றிலுள்ள உப்புக்களுடன் வினைபுரிந்துள்ளதால் இளம் பச்சை நிறத்துடன் காணப்படும். பூமியினுள் புதைந்தவை பச்சையாகக் காணப்படும். "அபிஷேகம்" செய்வதால் சில பளபளப்பாகக் காணப்படுகின்றன. சில வேளைகளில் உப்புப்

படிந்து காணப்படும். இது அகற்றப்படாவிடில் துவாரம் காணப்பட்டு சேதமடையும். எனவே இப்பர்சை கலந்த வெள்ளைப் பொடியாகிய "செப்புக்குளோரைடு" அகற்றப் பட வேண்டும், இல்லையேல் இது பிற இடங்களுக்கும் பரவும். இதற்கு "வெங்கல வியாதி" என்று பெயர். இப்பாதிப்பை நீக்க "சோடியம் பொட்டாசியம் டார்ட்ரேட்", "சோடியம் ஹைடிராக்ஸைடு" மற்றும் நீர் 3:1:8 என்ற விகிதத்தில் கலந்து தேய்த்து உப்புக்களை அகற்றினால் உண்மைத் தோற்றமடையும். மேலும் பரவாமல் இருக்க நன்கு நீரினால் கழுவி, காய வைத்து, அந்த இடத்தில் 2% எரிசாரயத்தில் கலந்த "பென்சோ ட்ரையசோல்" என்ற உப்பினைத் தேய்த்தால் இவ்வியாதி பரவாது, கட்டுப்படும். எனினும் வியாதி பரவாமல் அவ்வப்போது எண்ணெய் காப்பு செய்வது நல்லது.

# சீரமைப்பு

சீரமைப்பு என்பது ஒரு பொருள் வெளிப்படுத்தவிருக்கும் செய்தியை முழுமையாகப் பெற எடுக்கப்படும் நேரடி நடவடிக்கை. இம்முறையில் உடைந்த பகுதிகளில் புதிய பொருளால் நிரப்பி அதன் அசல் நிலையைப் பெறுவதாகும். கட்டடங்களின் உடைந்த பகுதிகளை அகற்றாமல் சீரமைப்பது சிறந்தது. பகுதிகள் காணவில்லை எனில் அதேவிதமாகச் செய்து பொருத்துவதே ஏற்றது. காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயில் தூண்கள் மாற்றப்பட்டுள்ளது இதற்கு உதாரணம்.



**காஞ்சிபுரம் வைகுண்ட பெருமாள் கோயில் தூண்கள் சீரமைப்பு.**

கட்டடங்கள் மழையிலும் வெயிலிலும் காய்ந்து நாளடைவில் கருமை நிறம் அடைகின்றன. இதற்குக் காரணம் காளான்கள் ஆகும். இவற்றை நீக்க "அமோனியா" கரைசல் கொண்டு புருசினால் தேய்த்தால் கருமை நிறம் நீங்குகிறது. பின்னர் 2% துத்தநாக சிலிக்கோ புளூரைடு என்ற நீர்க்கரைசல் பூசினால் காளான்கள் வளருவதிலிருந்து சிறிது காலம் தவிர்க்கலாம்.

மரங்கள், செடிகள் போன்றவை வளருவதால் கட்டடங்கள் சிதறுகின்றன. இவை வளராமல் தடுக்க அவ்வப்போது அவற்றை அகற்ற வேண்டும். பெரிதாக வளர்ந்து விட்டால் அவற்றை அகற்றுவது மிகக்கடினம். மரக்கொல்லிகள் விற்கப்படுகின்றன. அவற்றைப் பயன்படுத்தி செடிகளை மேலும் வளராமல் தவிர்க்கலாம். செடிகளை வெட்டியபின், தண்டுப் பகுதியில் "நைட்ரிக் அமிலம்" ஊற்றி வந்தால் செடிகள் அழிகின்றன. கையால் பிடுங்குவதே சிறந்த முறை.

# சில குறிப்புகள் . . .

★ பாதுகாப்புக்காக பயன்படும் சில வேதியியப் பொருட்களை, வேதியியப் பொருட்கள் விற்கும் நிறுவனத்திடமிருந்து பெற்று பாதுகாப்பாக வைக்க வேண்டும். எரியும் தன்மையுடைய திரவங்களை மிகக் கவனமாகக் கையாளுதல் வேண்டும்.

★ கரைசல் தயாரிக்கும்போது கரைக்க வேண்டிய வேதியியப் பொருளை எடையிட்டு வைத்துக் கொள்ள வேண்டும். பின்னர் கரைப்பானில், கரைக்க வேண்டும். உதாரணமாக 5% சலவைச் சோடா கரைசல் தயாரிக்க 5 கிராம் சலவைச் சோடா எடுத்து அதனை நீரில் கரைத்து, மொத்த அளவு 100 மில்லி லிட்டராக்க வேண்டும். இந்த முறையில் தேவையான அளவுக் கரைசல் தயாரித்துக் கொள்ளலாம்.

★ கட்டடங்கள் பராமரிப்பு செய்யுமுன் கோயில் சுவர்களில் உள்ள கல்வெட்டுக்கள், சிற்பங்கள், ஓவியங்களைக் குறித்து வைத்துக் கொள்ளுதல் வேண்டும். புகைப்படம் எடுப்பது மிக நலம்.

★ வெங்கலச் சிற்பங்கள், ஆபரணங்கள் மற்றும் பிற தளவாடங்களைப் புகைப்படம் எடுத்து வைத்துக் கொண்டால் திருட்டைக் கண்டு பிடிக்க மிகவும் உதவும்.

★ தீயணைப்புக் கருவிகள் பொறுத்தி அவற்றைப் பயன்படுத்தும் விதத்தைப் பணியாளர்களுக்குக் கற்றுத்தர வேண்டும்.

★ வெங்கலச் சிற்பங்கள் திருடப்பட்டு அவை கண்டுபிடிக்கப்பட்டால் அவை உண்மையானவையா "போலி"யா என்று கண்டறிய சென்னை அரசு அருங்காட்சியகம், கல்பாக்கம் இந்திராகாந்தி அணு ஆய்வு மையத்துடன் இணைந்து ஆய்வு நடத்தி வருகிறது.

★ வெங்கலச் சிற்பங்களைக் காட்சிக்கு வைக்கும்போது, பாதுகாப்புக் குறைவுகளால் அவை திருடப்படுவதைத் தவிர்க்க உண்மை வெங்கலச் சிற்பங்கள் போலத் தோற்றமளிக்கக்கூடிய முப்பரிமாண முழுப்படம் தயாரிக்கும் திட்டத்தை சென்னை அரசு அருங்காட்சியகம் அண்ணா பல்கலைக் கழக "லேசர் டெக்னாலஜி" துறையுடன் செயல்படுத்தி வருகிறது.

★ பாதுகாப்பு தொடர்பான தகவல்களைக் கீழ்க்கண்ட நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு செயல்படுத்தலாம்.

❖ அருங்காட்சியகங்களின் முதன்மை ஆணையர்,
அரசு அருங்காட்சியகம்,
எழும்பூர், சென்னை-600 008.

❖ தொல்லியல் கண்காணிப்பாளர்,
இந்திய தொல்லியல்துறை,
தென் வட்டம்,
தூய ஜார்ஜ் கோட்டை, சென்னை-600 009.

❖ இயக்குநர்,
தொல் பொருள் துறை,
சி.பி.டி. வளாகம்,
தரமணி, சென்னை-600 113.

❖ இயக்குநர்,
தஞ்சாவூர் மகாராஜா சரபோஜி
சரஸ்வதி மகால் நூலகம்,
தஞ்சாவூர்.